# ஜெயதீபம்

*Jeyatheepam - 02*

இதழ் 02

## மு/மல்லாவி மத்திய கல்லூரி

தேசிய பாடசாலை



## ஆண் மாணவர் விடுதித் திறப்பு விழாச் சிறப்பு மலர்

# 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு/மல்லாவி மத்திய கல்லூரி
கல்வியே செல்வம்
யோகபுரம்

# ஜெயதீபம்

*Jeyatheepam - 02*

இதழ் 02

## மு/மல்லாவி மத்திய கல்லூரி

தேசிய பாடசாலை



## ஆண் மாணவர் விடுதித் திறப்பு விழாச் சிறப்பு மலர்

11.03.2020

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்

| | |
|---|---|
| இதழின் பெயர் | :- ஜெயதீபம் (இதழ்-2) |
| வகை | :- திறப்புவிழாச் சிறப்பு மலர் |
| இதழாசிரியர் | :- திரு.ந.புலேந்திரகுமார் |
| இணை ஆசிரியர்கள் | :- திரு.ஆ.இளமாறன்<br>திரு.த.சர்மிளன் |
| வெளியீடு | :- கல்லூரிச் சமூகம்,<br>மு/மல்லாவி மத்திய கல்லூரி,<br>(தேசிய பாடசாலை)<br>யோகபுரம், மல்லாவி. |
| பதிப்பு | :- 2020 |
| பதிப்புரிமை | :- மு/மல்லாவி மத்திய கல்லூரி |
| பக்கங்கள் | :- 64 |
| எழுத்து | :- 12 புள்ளி |
| தாள் | :- 70 g |
| படிகள் | :- 250 |
| அச்சுப்பதிப்பு | :- தணூஸ் டிஜிற்றல் ஆர்ட்<br>& வீடியோ,<br>இணுவில், யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
திராவிடநற்றிரு நாடும்
அத்திலக வாசனைபோல்
அனைத்துலக மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்த பெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்து துடைக்கினு மோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போலுலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயனன் மறந்து வாழ்த்துதுமே!

**பேராசிரியர் மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக்கீதம்

மல்லாவி உறை மத்திய கல்லூரி
மாண்புடனே என்றும் - வாழ்க
மாணவச் செல்வங்கள் வாழ்க
மகிழ்வுடன் கல்வியில் தேர்க

(மல்லாவி...)

நீர்வளம் நிலவளம் அனைத்துமே பொலிந்து
நிகரில்லாச் செல்வங்கள் மலிந்து
நேமியில் பலரும் புகழ் மல்லாவியில்
நிமிர்ந்திடும் மத்திய கல்லூரி

(மல்லாவி...)

உள்ளத்தில் பண்பும் உடலுறு பலமும்
ஓங்கிடச் செய்திடும் கழகம்
ஒழுக்கமும் நேர்மையும் உயர்ந்திட நாளும்
உன்னத பணியினை ஆற்றும்

(மல்லாவி...)

செந்தமிழ் ஆங்கிலம் சிறப்புறு கணிதம்
செயன்முறை விஞ்ஞானக் கலைகள்
சுற்றாடற் கல்வி வர்த்தகம் மனையியல்
தொல்புகழ் விவசாயக் கல்வி

(மல்லாவி...)

இசையுடன் நடனம் எழிலுறு சித்திரம்
ஆகிய பயில் நெறி அனைத்தும்
ஊட்டியே வளர்க்கும் ஆசான்கள் வாழ்க
உலப்பிலா அதிபரும் வாழ்க.

(மல்லாவி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு/மல்லாவி மத்திய கல்லூரி

## யோகபுரம்

### மகுட வாக்கியம்

"கல்வியே செல்வம்"

### தரிசனம்

"சவால்களுக்கு முகம் கொடுக்கும் சாதனை மிகு மாணவர்களை உருவாக்கும் பணிகளின் பங்காளிகளாவோம்."

### குறிக்கோள்

"பெருமை மிகு புகழும் கொண்ட மு/மல்லாவி மத்திய கல்லூரியின் அங்கத்தவர்களாகிய நாம் தேசத்தின் குறிக்கோளுக்காய் தேர்ச்சிமிகு மாணவர்களாக உருவாகி நாட்டின் எதிர்காலத்தை வளமாக்க வழிசமைப்போம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழின் அகத்தே....


| | பக்கம் |
|---|---|
| அருளாசிச் செய்திகள் | 06 |
| வாழ்த்துச் செய்திகள் | 08 |
| இதழாசிரியரின் இதயத்திலிருந்து | 20 |
| கல்லூரி முதல்வரின் உள்ளத்திலிருந்து | 21 |
| The Inauguration of the boys Hostel Mallavi Central College | 25 |
| மல்லாவி மண்ணில் மாணவர்களுக்கோர் விடுதி | 26 |
| Message from A well wisher | 28 |
| கனடாவிலிருந்து மல்லாவி விடுதிகள் நோக்கிய பார்வை | 30 |
| விடுதியில் எனது சேவைக்காலம் | 32 |
| மல்லாவி மண்ணில் நம் மகத்தான பணி | 33 |
| மு/மல்லாவி மத்திய கல்லூரியின் மாணவர் விடுதிகள்– ஓர் வரலாற்று நோக்கு | 34 |
| பிறப்புரிமைப் பொறியியல் தொழினுட்பம் – ஓர் பார்வை (Genetic engineering Technology) | 39 |
| என் வாழ்விற்கு வித்திட்ட தாய் | 43 |
| ஆண்கள் விடுதி பற்றி என் மனக்கண்களில் தோன்றிய பதிவுகள் | 44 |
| மிடுக்குடன் மிளிரும் விடுதிகள் | 46 |
| விடியலின் விருட்சம் | 48 |
| இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் | 49 |
| விடுதி வாழ்க்கை | 50 |
| விடுதி அனுபவம் | 52 |
| வளங்கள் பெருகட்டும் வளர்ச்சி மலரட்டும் | 54 |
| விடிவெள்ளி | 55 |
| ஆண்கள் விடுதியில் முதற்பாதம் | 56 |
| களமாடு கல்விக்காய் | 57 |
| விடுதிசார் நற் பெறுபேறுகள் வரிசையில் | 58 |
| ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருதுகள் | 59 |
| இதயத்தின் இனிமையான நன்றியுடன் | 64 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழ் வெளியீட்டுக் குழு

| | | |
|---|---|---|
| **தலைவர்** | :- | திரு.து.யேசுதானந்தர் |
| **இதழாசிரியர்** | :- | திரு.ந.புலேந்திரகுமார் |
| **இணை ஆசிரியர்கள்** | :- | திரு.ஆ.இளமாறன்<br>திரு.த.சர்மிளன் |
| **செயற்குழு உறுப்பினர்** | :- | திருமதி.சுகுணா இராசேந்திரம் (பிரதிஅதிபர்)<br>திரு.அ.சுரேஸ்காந்த்<br>திரு.கு.நிரோஜன்<br>திருமதி.சோ.சுலோஜன்<br>திரு.கு.சஜீவன்<br>திரு.ப.சண்முகப்பிரியன்<br>செல்வி.சு.மங்களச்செல்வி |
| **கணினி எழுத்தாளர்** | :- | செல்வி.சு.மங்களச்செல்வி<br>திருமதி.சோ.சுலோஜன் |
| **கணினி வடிவமைப்பு** | :- | திரு.கு.சஜீவன் |
| **அட்டைப்பட வடிவங்கள்** | :- | திரு.ந.புலேந்திரகுமார் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளாசிச்செய்தி

இந்த ஜெகமானது மெஞ்ஞானமும் விஞ்ஞானமும் இரண்டறக் கலந்து இயங்கி கொண்டிருக்கின்றது அந்த வகையில் விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் போக்கில் மெஞ்ஞானத்தின் முக்கியத்துவத்தையும் விஞ்ஞானத்தின் தேவையினையும் உணர்ந்து எம் எதிர்கால சக்தியினைக் கட்டியெழுப்பும் நோக்கில் பாடசாலைகளானது அளப்பெரிய சேவையினை மேற்கொண்டு வருகின்றன அந்த வகையில் எமது பிரதேசத்தில் அவ்வாறான சேவையினை மு/மல்லாவி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை முதன்மையாக ஆற்றி வருகின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை அப்படியாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பலதரப்பட்ட அபிவிருத்தி திட்டங்களையும் நிகழ்த்திய வண்ணம் உள்ளது. அவ்வாறாக வெளிமாவட்டத்தில் இருந்து வரும் ஆசிரியர்களுக்கான விடுதியினையும் அமைத்து கொடுத்தமை மற்றும். தூர பிரதேசத்தில் இருந்து வரும் பெண் பிள்ளைகளின் சிரமத்தை கருத்தில் கொண்டு அவர்களின் நலன் கருதி பெண்கள் விடுதியினை அமைத்தமையும் குறிப்பிடத்தக்கது அந்த வரிசையில் ஆண் பிள்ளைகளுக்காகவும் ஆண் மாணவர் விடுதியை அமைத்து தனது சேவையினை விரிவுபடுத்திக் கொண்டு செல்கின்றது. இத்தகைய அளப்பரிய சேவையினை மேற்கொள்கின்ற அபிவிருத்திசபை மற்றும் சமூகத்தினையும் வாழ்த்துவதோடு, கடவுள் எமக்குள்ளும் உள்ளான் என்பதற்கு மேற்கோளாக அமைந்த நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கிய நல்லுங்களையும் வாழ்வாங்கு வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இவ் அரும்பணியை நினைவு கூருமகமாக வெளிப்படவுள்ள சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தியினை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு மலர்க் குழுவினரையும் பாராட்டுகின்றேன். இத்தகைய பணியினைச் சிறப்பறச் செய்த அனைவருக்கும் மல்லாவி பாலசுப்பிரமணிய சுவாமிகளின் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

**ஸ்கந்த பூஜா சிவஸ்ரீ.இ.திருமுருகானந்தக்குருக்கள்,**
பிரதமகுரு,
பாலசுப்பிரமணிய தேவஸ்தானம்,
மல்லாவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளாசிச் செய்தி

தமிழகச் சமூகத்தின் கல்வி வரலாறு மிகப்பழமையானது. பல்வேறு இலக்கிய வரலாற்று, அறிவியல், ஆன்மீகத் துறைகளில் பல நல் மனிதர்களின் மனிதநேய செயற்பாடுகளின் பயன் வெறுமனே எழுத்து வடிவில் மட்டும் நின்று விடாமல் சமூக அக்கறை, சமூக ஒழுங்கு மற்றும் சீர்திருத்தம் போன்ற செயற்பாடுகள் பல சமூக அமைப்புக்களாலும் தனிநபர் செயற்பாடுகளாலும் முன்னெடுக்கப்படுகின்றன. ஏழை மாணவர்களின் கல்விக்குத் தேவையான உறுதுணையை வழங்குவதில் மு/மல்லாவி மத்திய கல்லூரியின் அங்கமான 'ஆண் மாணவர் விடுதி ' சிறந்தவோர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. இந்தக் கல்விசார் சமூகப்பணியை ஆரம்பிப்பதற்குத் தனது தாராள உள்ளத்தையும், பிறர் அன்பு பண்பையும் பகிர்ந்து கொண்டு வாழக்கூடிய வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் ஐயா மற்றும் இதை நிர்வகிக்கும் மதிப்புக்குரிய அதிபர் திரு.து.யேசுதானந்தர் இவர்களின் பணி மென்மேலும் சிறப்புற இவர்களோடு சேர்ந்து இந்த நல்ல எண்ணத்திற்காக பாடுபடும் ஒவ்வொருவரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க எனது செபங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

அன்பே கடவுள்

என்றும் அன்புடன்,

**நேசன் குலாஸ்** CMF,

பங்குத்தந்தை,

மல்லாவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வட மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.edumin.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

# வாழ்த்துச்செய்தி

மு/மல்லாவி மத்திய கல்லூரியின் ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் **"ஜெயதீபம் இதழ் - II"** மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**"ஒரு பாடசாலை திறக்கப்படும்போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படும்"** என்பது பழமொழி. அதற்கேற்ப, நல்ல மாணவர்களை உருவாக்குதல் பாடசாலைகளின் பணியாவதுடன் அவர்களின் எதிர்காலத்தினை நல்வழிப்படுத்தவேண்டிய பாரிய பொறுப்பும் கடப்பாடும் அதிபர் மற்றும் ஆசிரியர்களினுடையதாகும். அந்த வகையிலே இக் கல்லூரியானது தனது கல்விச்சேவையினைச் செவ்வனே ஆற்றிவருவதோடு மட்டுமல்லாது மாணவர்களைப் பண்படுத்தி வழிப்படுத்துவதிலும் முதன்மை வகிக்கின்றது.

அந்த வகையில் குறித்த பாடசாலையானது 2013 ஆம் ஆண்டளவில் பெண்களுக்கான விடுதியினைத் திறந்து இன்று 90 வரையிலான பெண் மாணவர்களைப் பராமரித்து வருகின்றது. தற்போது 40 வரையிலான ஆண் மாணவர்களைப் பராமரிப்பதற்கான ஆண் மாணவர் விடுதியினையும் அமைத்துள்ளது. இவ் விடுதித் திறப்பு விழாவினை முன்னிட்டு **"ஜெயதீபம் இதழ் - II"** எனும் மலர் வெளியிடப்படுகின்றமை சிறப்பானதொன்றாகும். இவ் விடுதியிலுள்ள மாணவர்களது உணவுத் தேவைகளினைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் விடுதி வளாகத்திலேயே பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றமை சிறப்பானதொரு செயற்பாடாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் பங்குகொண்டு ஆண் மாணவர்களுக்கான விடுதி அமைப்பிற்கு நிதியுதவி செய்தவரையும், **"ஜெயதீபம் இதழ் - II"** மலரினை வெளியிடுவதற்கும் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் மற்றும் மாணவர்களுக்கான விடுதி வசதிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமையினை முன்னிட்டு அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இ.இளங்கோவன்.
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்
விவகார அமைச்சு.
வட மாகாணம்.

செயலாளர் / ලේකම් / Secretary: 021-2219258
அலுவலகம் / කාර්යාලය / Office: 021-223 1343 (Gen.), 021-320 2794 (Admin.), 021-320 2281 (Plan.), 021-222 2283 (Acct.), 021-312 0681 (DSW)
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021- 223 0794 (Gen), 021- 312 0694 (Plan), 021 - 222 2293 (Acct)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மு/மல்லாவி மத்திய கல்லூரியானது ஆண் மாணவர் விடுதி திறப்பு விழாவினையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

துணுக்காய் வலயத்தில் ஒரேயொரு தேசியப்பாடசாலையாகத் திகழும் மு/மல்லாவி மத்திய கல்லூரியானது இப்பிரதேச மாணவர்களிற்கு கல்வியை வழங்குவதில் சிறப்பான பணியை ஆற்றிவருகின்றது. இப்பாடசாலையில் துணுக்காய் வலயத்தினது பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த பொருளாதார வசதி குறைந்த மாணவர்களும் கல்வி கற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடசாலையில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களது நிதிப்பங்களிப்புடன் ஆண் மாணவர் விடுதி அமைக்கப்பட்டுள்ளமை இப்பிரதேச மாணவர்களிற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். இவ் விடுதி அமைக்கப்பட்டதன் மூலம் இப்பிரதேச மாணவர்கள் இவ்விடுதியில் தங்கி நின்று கற்பதற்குரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவ்விடுதி மூலம் மாணவர்கள் சிறந்த பயனைப் பெற வாழ்த்துவதுடன் திறப்பு விழாவினையொட்டி வெளிவரும் "ஜெயதீபம் - II" இதழ் சிறப்புற வெளிவர வாழ்த்துகின்றேன்.

**திரு.செ.உதயகுமார்.**

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,

வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மு/மல்லாவி மத்திய கல்லூரியின் மாணவர் விடுதி திறப்பு விழாவினையொட்டி வெளியிடப்படும் "ஜெயதீபம் - II" எனும் நூலிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நான் பெரும் மகிழ்வடைகின்றேன்.

எமது துணுக்காய் கல்வி வலயத்திற்கு இப்பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள ஆண், பெண் மாணவர்களுக்கான இவ்விடுதிகள் பெரும் கொடையாகவே உள்ளன. இவ்வகையில் இவ்விடுதிகளை அமைப்பதற்கான பெருமளவு நிதியினை வழங்கியதோடல்லாமல் இவ்விடுதிகளை சிறப்பாக நடத்திச்செல்வதற்கான அடிப்படைத்திட்டங்களையும் வகுத்து, அவற்றுக்கான நிதியுதவிகளையும் வழங்கிவரும் வைத்திய கலாநிதி. விமல் ஜெயரட்ணம் அவர்களுக்கு இப்பாடசாலை சமூகம் சார்பாகவும் எமது துணுக்காய் கல்வி வலயம் சார்பாகவும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, அவரது இவ்வரிய சேவைக்கான பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்விடுதிகளில் எமது வலயம் சார்ந்த பிரதேசத்தில் வாழும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆண் மாணவர்களும் 89 பெண் மாணவர்களும் தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றனர். நாம் இவ்வாறு கல்வி கற்பதற்குரிய வசதிகளற்ற மாணவர்களை இப்பாடசாலையில் சேர்ப்பதோடல்லாமல் இவ்விடுதியில் தங்குவதற்கும் இப்பாடசாலையின் அதிபர் திரு.து.யேசுதானந்தர் அவர்களிடம் அனுமதி பெற்று வழங்குவது வழக்கம். இவ்வகையில் இவ்விடுதிகள் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றி, அவர்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டி வருகின்றது என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு இவ்விடுதிகள் இப்பாடசாலையின் தொடர் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் எதிலும் புதுமையும், எளிமையும் பேணி சாதனைகளில் சிகரங்களை தொட எனது வாழ்த்துக்களை கூறி, இறையாசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி.மாலதி முகுந்தன்**
வலயக்கல்வி பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரதேச செயலாளர் / ප්‍රාදේශීය ලේකම් / Divisional Secretary — 021 228 5266
பொது தொலைநகல் / General/Fax — 021 228 5262
info@thunukkai.ds.gov.lk
www-thunukkai.ds.gov.lk
பிரதேச செயலகம் - துணுக்காய்
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය - තුණුක්කායි
**DIVISIONAL SECRETARIAT - THUNUKKAI**
எனது இல / My No
உமது இல / Your No
திகதி / Date — 06.0 .202(


# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

துணுக்காய்ப் பிரதேசத்தில் தேசிய பாடசாலையாக மிளிர்கின்ற மல்லாவி மத்திய கல்லூரியிற்கு வலுச் சேர்க்கும் வகையில் ஆண் மாணவர்களுக்கான விடுதி திறப்பு விழாவினை சிறப்பிக்கும் முகமாக வெளியிடவுள்ள ஜெயதீபம் -2 என்னும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தேசியப் பாடசாலையாக மிளிர்ந்து கொண்டிருக்கும் மல்லாவி மத்திய கல்லூரியில் தூரப் பிரதேசத்திலிருந்து மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் ஆண் சிறார்களுக்கு வைத்தியகலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிப் பங்களிப்புடன் புதிதாக அமைக்கப்பட்ட விடுதி மிகப்பெரும் வரப்பிரசாதமாகும்.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் விடுதியும் இப்பிரதேச பெண் மாணவர்களுக்கு நன்மை தருவதோடு சிறப்பாகவும் இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த மாணவ விடுதிகளை நிர்மாணித்து வறுமைக்கோட்டிற்குட்பட்ட கற்பதற்கு ஆர்வமுள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உறுதுணையாக விளங்கும் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களுக்கு பிரதேச மக்கள் சார்பாக எனது மனமார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புவதோடு அவரது இது போன்ற பணிகளை மென்மேலும் எமது பிரதேசத்திற்கு தொடர்ச்சியாக கிடைக்கவேதுவாக அவர் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ இறைவன் என்றென்றும் அருள் புரிய வேண்டுகிறோம்.

**திருமதி ஆ.லதுமீரா.**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
துணுக்காய்.


| Asst. Divisional Secretary | Accountant | Asst. Director of Planning | Administrative Officer | Samurdhi Manager |
| --- | --- | --- | --- | --- |
| 021 228 5268 | 021 228 5265 | 021 228 5267 | 021 228 5261 | 021 228 5264 |

* மக்கள் பணியே மன நிறைவு * @mkds2016





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

"வளங்கள் பெருகப் பெருக
வாய்ப்புக்களுக்கான வாசல்கள் திறக்கப்படும்"

மு/மல்லாவி மத்திய கல்லூரி வரலாற்றுப்பாதையில் அதிபராக காலடி எடுத்து வைத்து பதின்நான்கு ஆண்டுகளில் பல வளங்கள் எமது கல்லூரிக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

மாணவிகளுக்கான விடுதியை ஆரம்பித்து ஏழு ஆண்டு நிறைவில் சிறப்பான, அழகான அனைத்து வசதிகளும் கொண்ட ஆண் மாணவர்களுக்கான 'விமல் ஜெயரட்ணம் ஆண் மாணவர் விடுதி' ஆரம்பிக்கப்பட்டுள்ளதை எண்ணி மனநிறைவடைகின்றேன்.

இறைவன் சில மனிதர்கள் வழியாக எமக்கு உதவிகளும், வழிகாட்டல்களும், அருட்கொடைகளையும் வாரி வழங்கிவருகிறார். அத்தகையவர்களில் ஒரு மாமனிதர்தான் அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்கள், பெண் மாணவிகள் விடுதித்திறப்புவிழாவில் ஆண்மாணவர்களுக்கு இப்பிரதேசத்தில் விடுதி அவசியமானது என்ற கருத்தை கூறியபோது வைத்திய கலாநிதி "பார்ப்போம்" எனக் கூறிய வார்த்தை தற்போது செயல் வடிவம்பெற்று நிறைவடைந்திருப்பது இப்பிரதேசத்திலுள்ள பின்தங்கிய மாணவர்களுக்குப்பெரும் வரப்பிரசாதமாகும்.

இவ் இரண்டு விடுதிகளும் அமையப்பெற்றுத் தொடர்ந்து இயங்குவதற்கு முழுமையான பங்களிப்பை வழங்கிவரும் கொடை வள்ளல் வைத்திய கலாநிதி அவர்களைக் கல்லூரிச் சமூகம் சார்பாக மனதாரப்பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எனது உள்ளத்தில் எழுந்த ஆண்மாணவர் விடுதி தேவை என்ற சிந்தனைக்கு முழுநிதிப் பங்களிப்பையும் வழங்கியவர் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களே. மேலும் இவ்விடயத்துக்குச் செயல்வடிவம் கொடுத்துச் சிறப்பாக அழகிய விடுதியை அமைத்து அவ்வப்போது வருகை தந்து பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கி வரும் நீர்ப்பாசனத் திணைக்கள பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் திரு.ந.சிறீஸ்கந்தராஜா அவர்களையும் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

எமது கல்லூரிக்கு இரண்டு விடுதிகளும் இரண்டு தூண்களாகும். இவ்விடுதிகளின் வளர்ச்சி கல்லூரியின் உயர்வுக்கு உந்துசக்தியாகும். இவ்வருடம் ஆரம்பிக்கும் ஆண் மாணவர் விடுதி கல்லூரியின் இலக்கை நிறைவு செய்வதற்கு அடித்தளமாக அமைய எல்லாம்வல்ல இறைவன் ஆசிகளை வேண்டி வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

**திரு.து.யேசுதானந்தர்**
கல்லூரி முதல்வர்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
தேசிய பாடசாலை,
யோகபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் ஆண் மாணவர் விடுதியை வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் எனது சிந்தனையில் புதிய வடிவம் கொடுத்து அமைப்பதற்கு வாய்ப்பு கிடைத்தமையை எண்ணி மகிழ்வடைகின்றேன்.

புனர்வாழ்வும் புதுவாழ்வும் என்ற அமைப்பினூடாகப் பல இடங்களில் கட்டிடங்கள் அமைக்கப்பட்ட போதிலும் வைத்திய கலாநிதி அவர்கள் மு/மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களின் மீது வைத்துள்ள மனிதநேயம் மிக்க மகத்தான சேவையின் பெரும் கொடை என்பது ஈடு இணையற்று மேலோங்கி நிற்கிறது.

தொடர்ந்து விடுதிகளிற்கு கிடைத்துவரும் உதவிகள் மூலம் பின்தங்கிய பிரதேச பெற்றோரை இழந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பயனடைந்துவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். மேலும் இவ்விடுதிகள் மூலம் மாணவர்கள் அனைத்து ஆற்றல்களும் வளர்ச்சி பெற்று கல்லூரி மிளிரவும், வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் மற்றும் வித்தியா ஜெயரட்ணம் அவர்கள் உடல், உள நலத்துடன் நீண்ட ஆயுள் பெற்று வாழவும் வாழ்த்துவதில் நிறைவடைகின்றேன்.

**பொறியியலாளர் ந.சிறீஸ்கந்தராஜா.**
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
நீர்ப்பாசன திணைக்களம்,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மு/மல்லாவி மத்திய கல்லூரியின் ஆண்கள் விடுதி திறப்புவிழா நிகழ்வு சிறப்புற வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

துணுக்காய் வலயத்தில் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் மல்லாவியில் மத்திய கல்லூரியின் நிர்வாகத்திறன் மிக்க அதிபர் திரு.து.யேசுதானந்தரினால் நிர்வகிக்கப்பட்டுவரும் பெண்கள் விடுதி "இராஜஅகம்" அற்புதமாகச் செயற்பட்டு வருவதைக் கண்டு மனநிறைவடைகின்றேன். பலதடவை பெண்கள் விடுதியை தரிசித்த போதும் இரு தடவைகள் விடுதியில் பிள்ளைகளுக்கு மனவளக்கலை யோகாப்பயிற்சி வழங்குவதற்காக விடுதியில் தங்கியிருந்த போதும் எல்லா செயற்பாடுகளையும் ஆழமாக அவதானித்தேன்.

செயல் விளைவு நீதி உணர்ந்து ஒவ்வொரு பணியையும் ஆற்றுகின்ற பணியாளர்களைப் பார்த்தேன். ஒழுக்கம், பணிவு, நிர்வாகத்துடன் ஒத்துழைப்பு கல்வி, இணைக்கலைத்திட்ட பங்கேற்பு, நேரமுகாமைத்துவமென ஒவ்வொரு படிநிலையிலும் உயர்ந்து செல்லும் மாணவிகள் இத்தனை வசதி வாய்ப்புக்களும், அதே தரத்திலுள்ள ஆண்பிள்ளைகளுக்கும் கிடைக்க செய்யவேண்டியது தார்மீகக் கடமையாகும். இதனை நன்கு உணர்ந்து கொண்ட வைத்திய கலாநிதி அவர்கள் பெண்பிள்ளைகளுக்குக் கிடைத்த அதே வரப்பிரசாதமும் ஆண்பிள்ளைகளுக்கு கிடைக்கும் வகையிலே ஆண்விடுதியினையும் அமைத்து கையளிக்கும் இந்த உயர்வான நிகழ்வு சிறப்புறவும், விடுதியில் கற்கும் ஆண் பிள்ளைகள் அனைவரும் சிறந்த ஆளுமைத் திறனோடு ஓங்கி வளர்ந்து சமுதாயக் கடனைத் தீர்க்கும் வகையிலே உயர்வாக பணியாற்றி இன்பம் காணவும் வாழ்த்துகிறேன்.

"நான் எனது வாழ்நாளில் யாருடைய
உடலுக்கும், மனதுக்கும் துன்பம் தரமாட்டேன்
துன்பப்படுவோர்க்கு என்னால் முடிந்த
உதவிகளைச் செய்வேன்"

என்ற இரண்டொழுக்கப் பண்பாட்டுக்கு அமைவாக படிப்பதற்கு வாய்ப்பின்றி துன்பப்பட்ட பிள்ளைகளின் துன்பத்தைப் போக்க எண்ணம், சொல், செயலால் கருமமாற்றிய அத்தனை நல்லுள்ளங்களையும் வாழ்க வளமுடன் என வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**திருமதி அ.வேதநாயகம்,**
ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர,
துணுக்காய் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

மத்திய கல்லூரியின் மகத்தான கல்விப்பணியில் காத்திரமான பங்களிப்பை வழங்கி நிற்பவைகளில் இக்கல்லூரியின் மாணவர் விடுதிகள் இரண்டுமே மிகமுக்கியம் பெறுகின்றன. அந்தவகையில் அண்மைக்காலத்தில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதியானது மிகவும் அழகாகவும், சிறப்புக்கள் மிகுந்ததாகவும் காணப்படும் ஓர் அமைப்பாகும். இவ்விடுதியினை அமைப்பதற்குரிய அடிப்படை எண்ணக்கருவானது அதிபரின் எண்ணத்தில் உதயமாகிய ஓர் உயரிய திட்டமாகும். இத்திட்டம் செயல்வடிவம் பெறுவதற்கு பல்வேறு தரப்பினர் தமது பங்களிப்பினை நல்கியிருந்தார்கள்.

“நன்றி மறப்பது நன்றல்ல” எனும் வள்ளுவன் தன் பொய்யாமொழிக்கிணங்க இவ்விடுதிக்கான முற்று முழுதான நிதிப்பங்களிப்பினை வழங்கிய வைத்தியர் விமல் ஜெயரட்ணம் அவர்களின் இணையிலாப் பங்களிப்பினை நினைவில் கொள்ள வேண்டியது எமது தார்மீகக் கடமையாகும். இவரது அளப்பரிய பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட இவ் ஆண் மாணவர் விடுதியானது காலமெல்லாம் நீடித்து நின்று மாணவர்களின் கல்வியில் ஈடு இணையில்லா பங்களிப்பினை வழங்க வேண்டுமென இறையாசி வேண்டி இதுபோன்ற செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் வாழ்த்துக்களை கூறிநிற்பதோடு திறப்புவிழாச் சிறப்பு மலரின் வாழ்த்துச் செய்தி வழங்க சந்தர்ப்பம் வழங்கிய மலராக்க குழுவிற்கும் நன்றி பாராட்டி நிற்கின்றேன்.

**திரு.செ.அரவிந்தன்.**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

காலப்பெருவெள்ளத்தால் கரைந்திடாக் கல்விதனை ஞாலத்தில் அளிக்கும் ஓர் உயர்ந்த கல்விக்கூடமாய் அமையும் மல்லாவி மத்தியின் கல்விப்பணிதனை சிறப்பாய் செய்திட அமைந்த கல்லூரியின் விடுதியின் வரிசையில் புதிதாக உருவாக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதியானது மிகவும் முக்கியமானதோர் அம்சமாகும்.

ஏலவே இக்கல்லூரியில் மிகச்சிறப்புடன் இயங்கிவருகின்ற மாணவிகள் விடுதிபோல ஆண் மாணவர்களுக்கும் ஓர் விடுதி உருவாக்கப்பட்டு தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் கற்றல்சூழலில் சரியான முறையில் கிடைக்கப்பெறாத மாணவர்களும் இவ்விடுதியில் இணைத்துக்கொள்ளப்படுவதன் மூலம் உயரிய கல்வியை பெற வேண்டுமென்ற கல்லூரிச் சமூகத்தினதும், பிரதானமாக கல்லூரி முதல்வரினதும் விருப்பத்திற்கு ஆண்டவன் செவிசாய்த்தது போல வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் பெருங்கொடையினை நினைக்கையிலே மனதில் மட்டற்ற மகிழ்ச்சி வெள்ளம் பாய்கின்றது. இத்தகைய கொடையினை ஈர்ந்தவருக்கு என்மனம் நிறைந்த நன்றிகளைக் கூறிநிற்கின்றேன்.

மேலும் இவ்விரு விடுதிகளின் மூலமாக பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் கல்விச்செல்வத்தினைப் பெற்று இம்மண்ணிற்கு பெருமை சேர்க்க வேண்டுமெனக் கூறி இதற்காக தம்மால் இயன்ற உதவிகளை வழங்கிய உத்தமர்களையும் அதன் வழிவந்த விடுதிகளையும் வாழ்த்தி இதனை எடுத்து இயம்புவதற்கு இனிய சந்தர்ப்பத்தினை நல்கிய மலர்குழுவிற்கும் மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

**திரு.சு.குகதாசன்.**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
யோகபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

முல்லை மாவட்டத்தின் மேற்கே துணுக்காய் பிரதேசத்தில் சிறந்த கல்விக் கூடங்களில் மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) முன்னணியில் உள்ளமை எல்லோரும் அறிந்ததே. மீள்குடியேற்றத்தின் பின் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அதிபர் திரு.து.யேசுதானந்தர் அவர்களின் எண்ணத்தில் உதித்ததே மாணவர் விடுதி ஆகும். 2013ம் ஆண்டு 6 மாணவிகளின் கல்விச்செயற்பாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட விடுதி பல கொடையாளிகளின் பங்களிப்புடன் வளர்ச்சி பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விடுதி தொடர்பாக பல சவால்கள், பல விமர்சனங்கள் வந்தாலும் அதிபரின் விடாமுயற்சியும், ஆளுமை திறனும் மேலும் வளர்ச்சிப் போக்கில் சென்றமை பாராட்டப்பட வேண்டும்.

இவ்விடுதியில் தங்கி கற்க பல மாணவிகளின் கோரிக்கை கிடைக்கப் பெற்றபோதும் இடவசதியின்மையால் அனுமதி மறுக்கப்பட்டது. இவ்வேளையில் (2015 காலப்பகுதியில்) கொடையாளி மதிப்பிற்குரிய வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்கள் விடுதியைப் பார்வையிட்ட போது விடுதியின் செயற்பாடுகளில் திருப்தியடைந்து "இராஜ் அகம்" என்ற மாணவிகள் விடுதியை அமைத்து தந்தமையால் மாணவிகள் விடுதி மேலும் சிறப்படைந்தது.

மாணவர்கள் பலர் தூர இடங்களிலிருந்து பாடசாலையின் கட்டடங்களில் தங்கி நிற்கும் நிலைமையைக் கண்ட வைத்திய கலாநிதி அவர்கள் மாணவர்கள் விடுதி அமைக்க முன்வந்தார். இதற்கான அனுமதியை அதிபர் திரு.து.யேசுதானந்தர் உரியவர்களின் அனுமதி பெற்ற போது விடுதிக்கான திட்ட வரைபடமும் மதிப்பீடும் பொறியியலாளர் திரு.ந.சிறீஸ்கந்தராசா அவர்களின் மூலம் தயார் செய்யப்பட்டது. தயார் செய்யப்பட்ட வரைபடம் ஆமை உருவம் போன்று இருந்தது. ஆண்கள் விடுதி உரிய முறையில் அமைப்பதற்காக 2018ம் ஆண்டு வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களால் பல பிரமுகர் முன்னணியில் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆண்கள் விடுதி குறுகிய காலத்தில் நிறைவு பெற்று திறப்புவிழா செய்வது என்பது இறைவனின் அருளும் கொடையாளி வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் கொடையுமே என்று கூறலாம். இக்கல்லூரியின் வளர்ச்சியில் ஆண், பெண் விடுதிகள் மிகப் பங்களிப்புச் செய்யுமென நம்புகிறேன். இவ்விடுதிகளை அமைக்க உதவிய அனைத்து நல் உள்ளங்களும் மனிதவடிவில் வந்த இறைதூதர்கள் என வாழ்த்திநிற்கின்றேன்.

**திரு.ஆ.சுந்தரமூர்த்தி.**
(பழைய மாணவன்)
அதிபர்,
மு/பாண்டியன் குளம் மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**"என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம் களிகூருகின்றது" (லூக்.1:47)**

வன்னிப் பிரதேசத்தின் மல்லாவி நகரில் அமைந்த மல்லாவி மத்திய கல்லூரியில் ஆண் மாணவர்களுக்கென ஒரு விடுதி அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்படுவதையிட்டு பெருமகிழ்வும், பூரிப்பும் அடைகிறேன். நீண்டகாலக் கனவு நிறைவேறுவதை நினைத்து இறைவனுக்கு மனமார நன்றி சொல்கின்றேன். இக்கனவு நனவாகுவதற்கு முழுமையான பங்களிப்பை வழங்கி உதவி புரிந்த ஹுச.விமல் ஜெயரட்ணம் அவர்களை நன்றியோடு நினைத்து, அவருக்கு நன்றி சொல்கின்றேன். அவருடைய தாராள மனந்தான் இன்று மல்லாவி மத்திய கல்லூரியில் ஆண், பெண் இருபாலாருக்குமான விடுதிகள் அமைய வழிகோலியிருக்கிறது.

30 வருட கால யுத்தத்தினால் நாம் எமது மக்களையும், உடைமைகளையும், நிலபுலங்களையும் இழந்து போனாலும், கல்வி என்ற செல்வத்தை ஒரு போதும் இழத்தலாகாது. போரின் வடுக்கள் எம் கண்களை விட்டு மறையாதபோதும், அவ்வடுக்களோடும் எமது மாணவர்கள் கல்வியில் பல சாதனைகள் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

2013ம் ஆண்டு நான் மல்லாவி பெண்கள் விடுதியில் பணியாற்றியவேளை, எமது மாணவிகளின் க.பொ.த சாதாரண தர, உயர்தரப்பெறுபேறுகள் கல்வியில் அவர்களுக்கிருந்த ஆர்வத்தைத்தெளிவாக வெளிக்காட்டியது. பலர் உயர்தரத்தில் கல்வி கற்பதற்குரிய பெறுபேற்றினையும், இன்னும் பலர் பல்கலைக்கழக அனுமதி பெற்றதையும் நான் நன்கு அறிவேன்.

இப்பிள்ளைகளின் கல்வி ஆர்வத்தைக் கண்டுதான் பல உபகாரிகள் மல்லாவியில் பெண்கள் விடுதியை அமைக்க முன்வந்தனர். அதேபோல இன்று ஆண்களுக்கும் ஒரு விடுதி அமைக்கப்பட்டிருப்பது மனநிறைவை அளிக்கின்றது.

இந்நன்நாளிலே, இவ்விடுதி அமைவதற்கு பல வழிகளிலும் உழைத்த அனைவரையும், கட்டிடக் கலைஞர்களையும், மாணவர் நலன்கருதி தமது முழுமையான பங்களிப்பை நல்கிய ஹுச.விமல் ஜெயரட்ணம் அவர்களையும் நன்றியோடு நினைப்பதோடு, மாணவர்கள் அனைவரும் கல்வியில் மேலும் முன்னேற எனது வாழ்த்துக்களையும், செபங்களையும் கூறிநிற்கின்றேன்.

இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

**அருட்சகோதரி ம.கௌசலா.**
நல்லாயன் சபை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

அமைதியை அள்ளி வழங்கும் அழகான சுற்றாடலில் பூத்துக்குலுங்கும் வண்ணமிகு மலர்களுடன் ரம்மியமான நீர்த்தடாகம் முன்புறத்தே அமைந்து வனப்பினை அள்ளி வழங்க கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் அழகிய கட்டடம்தான் கலாநிதி விமல் ஜெயரட்ணம் ஆண்கள் விடுதி. இவ்விடுதியின் திறப்புவிழாவை முன்னிட்டு மலரும் இவ் இதழில் மனம் நிறைந்த வாழ்த்துச் செய்தியை பதிவு செய்வதில் மிகுந்த மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகின்றேன்.

இவ்விடுதியின் உருவாக்கத்தில் தன்முழுமையான பங்களிப்பினை வழங்கி மாணவர்களின் பாதுகாப்பான கல்வி முன்னேற்றத்திற்கும், இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக செயலாற்றிக்கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களை நன்றியோடு நினைவு கூர்ந்து வாழ்த்துகிறேன்.

அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் இறையாசிகள் நிறைவாகப் பெற்று இன்புற வேண்டி நிற்கின்றேன்.

பெண் மாணவிகள் விடுதியின் வளர்ச்சியில் பொறுப்பாகச் செயற்படும் அதிபர் அவர்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆண் மாணவர் விடுதியின் வளர்ச்சியிலும் அரும்பணியாற்றுவார் என்பது எமது திடமான நம்பிக்கை. அவருக்கும் எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

நிறைவாக ஆண்கள் விடுதியின் பொறுப்பாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் திறப்பு விழாவின் வாழ்த்துக்களை பதிவு செய்து மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தால் அவர்களது எதிர்காலம் சிறப்புற அமையவும் அதற்கான பணியினை முன்னெடுத்து செயற்படும் விமல் ஜெயரட்ணம் அவர்கள் பல்லாண்டு சேவையாற்றவும் இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

நன்றி

**செல்வி கொ.தர்சினி ஜஸ்ரினா**
மாணவர் விடுதிக்காப்பளர்
மு/மல்லாவி மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியர் இதயத்திலிந்து

புலரும் பொழுதெல்லாம் புதுயுகம் படைக்கவென புறப்பட்டுவரும் மாணவப்படையணிக்கு அகமும், முகமும் மலர என்றும் அழிவில்லாக்கல்விதனை சுமையும் இடரும் சொல்லொணாத் துயரும் பாராது நிதமும் நகமும், சதையும் என அவருடன் இணைந்து செயலாற்றும் பணமும், புகழும் வேண்டா ஆசிரியர்குழாமைக் கொண்ட அகமும் புறமும் வென்ற மாசறு இம் மல்லாவி மத்திய கல்லூரியிலே மாணவர் மனதினை வென்ற மகத்தான மற்றுமொரு படைப்பே மத்திய கல்லூரியின் ஆண் மாணவர் விடுதி.

மல்லாவி என்னும் மகத்தான மண்ணிலே தொலைதூர மாணவர் துயரங்கள் துடைத்திடும் சிறப்பான பணியிலே முனைப்பென விளங்கும் மாணவர் விடுதியின் அளப்பெரும் பணியினை அழகுடன் இயம்பிடும் அழகிய இதழ் இது. முன்னைய விடுதியின் முதற்பணி முடிகையின் பின்னைய விடுதியின் புதுப்பணி ஆரம்பமென புகழேதும் விரும்பாத கலியுக கர்ணனாம் கல்லூரிக்குக் கிடைத்த பெருவள்ளல் காலத்தால் அழியாத கடைசிவரை நிலைத்து நிற்கும் கோலத்தை இட்ட கோமகன் விமல் ஐயா வித்திட்ட முத்து இவ்விடுதி.

ஆரம்பம் அதுமுடிய அடுத்தது நானென்ன செய்யவென ஓரங்கம் கூட விடாது ஒட்டு மொத்த நிதிச்செலவை ஒரேயடியாய் கொடுத்து விட்ட ஒப்புவமையேதுமற்ற உத்தமர் வைத்தியர்.

இப்பெரிய கொடையினை இம்மியேதும் பிசகாது இரவு, பகல் வேளையெல்லாம் இடைவெளியில்லாது இணையில்லாக் கவனிப்பினால் இன்று இம் மாணவர்கள் கைகளிலே கிடைக்கச் செய்த இணையற்ற முதல்வர் யேசு ஐயா இவ்விருவர் மட்டுமன்றி இன்னும் பலர் இப்பணியில் இணைந்து இயன்ற இன்பணியை இவ்விதழின் ஆசானாக நினைவு கூர்ந்து நித்தம் இக்கல்லூரியின் நிகரில்லாப் பணிகள் எல்லாம் செல்வம் அத்தனையும் அவரவர்க்கு சிறப்புடனே வழங்குகின்ற ஒப்புவமை ஏதுமற்ற எம்பெருமான் சக்தியின்றி வேறில்லை என்பேன். அத்தனையும் வழங்கி நின்ற என்னவனின் பாதாரவிந்தங்கள்தனைப் பணிந்து: மத்திய கல்லூரியின் மலர் சிறக்க மாணவர் மனம் சிறக்க, மண் வளம் சிறக்க, மழை சிறக்க, மல்லாவி மண்ணின் கற்றோரும், மற்றோரும் சிறக்க மன்றாடி வேண்டுகின்றேன் என் மனம் நிறைந்த ஆண்டவனே மனம் வையுமென.

நட்புடனும் நன்றியுடனும்,

இதழாசிரியர்,

**திரு.ந.புலேந்திரகுமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விப் பணிக் குழாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியின் கல்விசாரா ஊழியர்கள்




# மேலைத்தேய வாத்தியக் குழு - விடுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண் மாணவர் விடுதிப் பணியாளர்கள்



## மாணவிகள் விடுதிப் பணியாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி முதல்வரின் உள்ளத்திலிருந்து

மு/மல்லாவி மத்திய கல்லூரியானது தனது வரலாற்றுப் பாதையில் பல வளர்ச்சிப் படிகளைக் கடந்து வந்துள்ளது. எனது சேவைக்காலத்தில் பின்தங்கிய கிராமத்துப் பிள்ளைகளிற்கான விடுதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது என்ற என் அவாவிற்கு உயிர் கொடுத்தவர் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்கள். அவரின் முழுமையான பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு ஆரம்ப காலத்தில் நம்பிக்கை ஊட்டியவர்கள் நல்லாயன்சபை அருட்சகோதரிகள்.

இப்பணியில் தொடர்ச்சியாக இரண்டு விடுதிகளையும் அவ்வப்போது பார்வையிட்டு தேவையான உதவிகளைக் கேட்கும் போதெல்லாம் தனது நேரடி மேற்பார்வையில் வைத்திய கலாநிதியுடன் கலந்துரையாடி, நிறைவேற்றித் தந்துகொண்டிருப்பவர் பொறியிலாளர் நல்லையா சிறீஸ்கந்தராஜா அவர்கள்.

எமது கல்லூரியின் 21 ஏக்கர் நிலப்பரப்பும் தற்போது முழுமையான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் செயன்முறை ரீதியிலான அனுபவக் கற்றலுக்காகவும் ஏனைய பயன்களைப் பெறுவதற்காகவும் நஞ்சற்ற சேதன மரக்கறித்தோட்டம், பழத்தோட்டம் (பப்பாசி, மா, பலா, கயூ, வாழை), தென்னைச் செய்கை, கிழங்குப் பயிர்கள் (மரவள்ளி, பீற்றூட், கரணை, முள்ளங்கி) மற்றும் கால்நடை வளர்ப்பு (கோழி, மாடு) போன்ற விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுக் காலத்திற்குக் காலம் மேம்படுத்தப்பட்டு வருகின்றது.

விடுதிகளில் தங்கி நின்று கற்கும் மாணவர்களுக்கும், பெற்றோர் இல்லாத பிள்ளைகளிற்கும் மற்றும் மாதாந்தக் கட்டணம் செலுத்த முடியாத 17 பிள்ளைகளிற்குமான முழுக்கட்டணத்தையும் மேலதிக நிதியையும் ஏனைய பிள்ளைகளிற்குரிய விடுதியின் ஏனைய அனைத்து தேவைகளுக்கும் மாதாந்தம் வைத்திய கலாநிதி அவர்கள் தேவையான நிதியை வழங்கிவருகிறார்.

இவ்விடயங்களைச் சிறப்பாகக் கையாள்வதற்கும் கணக்குகளைச் சரிபார்த்து நம்பிக்கையூட்டுவதற்கும் பொறியியலாளர் மற்றும் அவரது திணைக்கள கணக்காய்வுப் பகுதியினர் வருகை தந்து நேரடியாக பார்வையிட்டுச் செல்வதும் எமக்குப் பேருதவியாக அமைந்து வருகிறது.

**ஆண்மாணவர் விடுதி ஆரம்பித்ததன் நோக்கம்:**

பின்தங்கிய பிரதேசங்களில் கல்வியைத் தொடர முடியாதவர்களுக்குக் கல்வி வாய்ப்பை வழங்கல்.

பெற்றோர் இல்லாத பிள்ளைகளுக்கு தங்குமிடம் மற்றும், பாதுகாப்புடன் கூடிய கல்வியை வழங்கல்.

பெண்பிள்ளைகள் சமுதாயத்தில் கல்வியில் உயர்நிலை அடைகின்ற அளவிற்கு சமமாக ஆண்பிள்ளைகளை உருவாக்கல்.

ஒழுக்க விழுமியங்களுடன் கூடிய பண்பாட்டு ரீதியான சமநிலை ஆளுமைமிக்க ஆண்மாணவர் சமுதாயத்தை உருவாக்கல்.

சமுதாயத்தில் கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடு ரீதியாக முழுநிறைவுள்ள மாணவர்களை உருவாக்கல்.

இணைபாட விதான செயற்பாடுக;டாக தன்னம்பிக்கை, சமூகத்திறன்கள் தலைமைத்துவ பண்புகளை உருவாக்கல்.

கல்லூரி மாணவர் தொகையை அதிகரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்கள் இரண்டு விடுதிகளுக்கும் வழங்கிவரும் நிதியூட்டத்தில் பல வகையான செயற்பாடுகள் இடம்பெறுகிறது.

பெண் மாணவர் விடுதியில் வைத்திய கலாநிதியின் மகன் ஞாபகார்த்த கட்டிடத்தொகுதி 'இராஜ் அகம்' அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தொகுதியில் தங்குமிட அறைகள் (மலசலகூட வசதியுடன்) கற்றல் கூடம், உணவு பரிமாறும் மண்டபம், கணினிக் கூடம், ஒன்று கூடல் மண்டபம், களஞ்சிய அறை, சமையல் அறை, அலுவலகத்தொகுதி, விருந்தினர் தங்குமிட அறை, பார்வையாளர் இருக்கை அறை, மேலதிக வகுப்பு மண்டபம் என்பனவற்றுடன் கட்டில்கள், மெத்தைகள், அலுமாரிகள், கற்றல்கூடக் கதிரைகள், உணவு உண்பதற்கான கதிரை, மேசைகள் போன்ற அனைத்து வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது.

சூரியபடல் தொகுதி (44Panel)

பெண் மாணவிகளுக்கான பாதுகாப்புக்கள், சுற்றுமதில் அமைக்கப்பட்டுள்ளது.

கோழிப்பண்ணை (50'x15') (போசாக்கு உணவு) 350 கோழிகள் வளர்க்கக்கூடியது.

மாட்டுத் தொழுவமும்(40'x20'), ஜேசி இன மாடுகள் (விடுதி பால் தேவையை நிறைவு செய்ய) தற்போது பசு - 04, நாகு - 03, நாம்பன் -02, நாம்பன் கன்றுகள் - 02

நல்லின பழமரக்கன்றுகள் வைத்திய கலாநிதி அவர்களால் வழங்கி நாட்டி பராமரிக்கப்படுகின்றது.

குடிநீர் வசதிக்காக வடிகட்டும் இயந்திரத்தொகுதி இரண்டு விடுதிகளுக்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளது

குடிநீர் மற்றும் தோட்டச்செய்கைக்கான கிணறுகள் (நான்கு குழாய்க்கிணறுகள்)

பெண்கள் விடுதியில் பார்வையாளர்கள் பிள்ளைகளை தரிசிக்கும் வட்டகுடில்

பெண்கள் விடுதியின் தளபாடங்கள், கற்றல் கதிரைகள், உணவு மேசைகள், கதிரைகள், மரஅலுமாரிகள், உருக்கு அலுமாரிகள், கட்டில்கள், மெத்தைகள்,

பெண்கள் விடுதிப்பணியார்களுக்கான மோட்டார் வாகனம்

பெண்பிள்ளைகளுக்கான விடுதியில் தங்கிநிற்கும் போது பயன்படுத்துவதற்கான ஒவ்வொருவருக்கும் இரண்டு செற் உடைகள் மற்றும் விளையாட்டு உடைகள், மேலைத்தேச இசைக்கருவிகளுக்கான உடைகள்

ஆண்மாணவர் விடுதி வளாக துப்பரவும், நிலம் மட்டப்படுத்தல் வேலைத்திட்டம் நிறைவு

ஆண்மாணவரின் விடுதித்தொகுதி மாணவர் தங்குமிட அறைகள், அலுவலக அறை, பணியாளர் தங்குமிட அறைகள், மலசலகூட வசதிகள், உணவு பரிமாறும் அறைகள், சமையல் அறை, கற்றல் மற்றும் வைபவங்களுக்கான மண்டபம் என்பன அமைக்கப்பட்டுள்ளது

ஆண் மாணவர்களுக்கான மின்சாரத்தேவையை முழுமையாக நிறைவு செய்யக்கூடிய சூரிய படலத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

ஆண் மாணவர் விடுதி வளாகம் பாதுகாப்புடன் கூடிய மறைக்கப்பட்ட வேலி அமைக்கப்பட்டுள்ளது.

ஆண் மாணவர் விடுதியில் விசேட விருந்தினர்கள் மற்றும் வளவாளர்கள் தங்குமிட வசதி வாய்ப்பு அனைத்து விடுதிக்குரிய தளபாடம், A/C வசதிகளுடன் தங்குமிட விடுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✍ ஆண் மாணவர் விடுதியில் தோட்டப் பராமரிப்பாளர் விடுதி, சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது
- ✍ 19. ஆண்மாணவர் விடுதிக்கான தளபாடங்கள் (கட்டில்கள், மெத்தைகள், கற்றல் கதிரைகள், உணவு மேசை, கதிரை, அலுவலகமேசை, கதிரைகள், உருக்கு அலுமாரிகள் வழங்கப்பட்டுள்ளது.
- ✍ ஆண்மாணவர் விடுதியின் முன் முற்றத்துத்தடாகம் கற்கள் பதிக்கப்பட்ட நுழைவாயிற் பாதை பூங்கன்று வளைவுகள் ஆகியவை சிறப்பாக உள்ளது.

இவ்வாறான பலவகைப்பட்ட வசதிகளுடன் இவ்விடுதிகள் இரண்டும் தொடர்ந்து இயங்குவதற்கான செலவுத்தொகை அனுசரணையை வைத்திய கலாநிதி அவர்கள் வழங்கிவருகிறார்

பெண் மாணவிகள் விடுதி நடாத்துவதற்கான வருடாந்த செலவு வழங்கிவருகிறார்.

எதிர்வரும் காலத்தில் நிலையான வைப்பு ஒன்றின் மூலமாக மாதாந்தம் கிடைக்கும் தொகையைக் கொண்டு விடுதியை இயக்குதல் என்ற சிந்தனைக்கு திறப்புவிழா நாளில் 20மில்லியன் நிலையான வைப்பிலிடப்பட்டு கையளிக்கப்படவிருப்பது மிகச் சிறப்பானதாகும். மேலும் இக்கொடை எல்லோருக்கும் உற்சாகத்யையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு விடுதிகளுக்கும் மாணவர்களுக்கான மேலதிக கற்றலுக்கான பாடங்களான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்படுகிறது.

இரண்டு விடுதிகளிலும் பராமரிப்பாளர்கள், சமையல் பணியாளர்கள், தோட்டச்செய்கையாளர், மாடு பராமரிப்பாளர், என மொத்தம் 12 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுச் சேவையாற்றுகிறார்கள்.

இரண்டு விடுதிகளுக்குமான வேலைத்திட்டங்களும் சேவைகளும் தொடர்ச்சியாக விரிவடைந்து வளர்ச்சி பெற்று வருவதற்கு எல்லாம் வல்ல இறைவன் வைத்திய கலாநிதி மூலமாக் பொறியியலாளர் ஊடாக உதவிவருகிறார். வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் மற்றும் அவரது துணைவியாரையும் இறைவன் தொடர்ந்து சேவையாற்றக்கூடிய உடல், உள ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்கிடவேண்டி அதிபர் அறிக்கையை நிறைவாக்குகிறேன்.

**திரு.து.யேசுதானந்தர்.**
கல்லூரி முதல்வர்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
(தேசிய பாடசாலை),
யோகபுரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அழகைப்பற்றி கனவு காணாதீர்கள்,
அது உங்கள் கடமையை பாழாக்கி விடும்.
கடமையை பற்றி கனவு காணுங்கள்
அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்."

– அப்துல் கலாம் –



"சுமைகளை கண்டு நீ துவண்டுவிடாதே!
இந்த உலகத்தை சுமக்கும் பூமியே
உன் காலடியில்தான்!!!"

– சுவாமி விவேகானந்தர்–


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆண்கள் விடுதி மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் விடுதி மாணவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரியின் பெண்கள் விடுதியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிப்பங்களிப்புடன் அமைக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டிருக்கும் "இராஜ் அகம்" விடுதித் தொகுதியானது அவரது புதல்வர் இறையடி எய்திய இராஜ் வோல்டர் அவர்களின் நினைவானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விருதியின் விழுதுகளின் உள்ளத்து உணர்வலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# The Inauguration of the Boys Hostel Mallavi Central College

I am delighted to see the completion and the establishment of the Boys hostel in Mu/Mallavi Central College. I feel very proud and privileged to be a part of the team that has been responsible for the implementation of this project. For this honour and privilege I have thank many. Much of the credit for the hostel project must go to the principal Mr.T.Jesuthananthar. He along with Sisters Gowsala and Siriya Pushpam of the good shepherd order sowed the seeds for the hostel project. The project with assistance of donations from Mrs.Shalini Wickramasuriya and Mrs.Nandani Hawley got off the ground in the year 2013. In 2014 Mr.T.Jesuthananthar invited me to the school as I was making some donations on regular basis to assist some of the hostel girls. On visiting the hostel Sis.Gowsala took me around the hostel and drew my attention to the short comings of the hostel and spoke about the varying needs of the students. Sis.Gowsala's love and concern for the welfare of the girls inspired me to try and do something to improve their living standards. This resulted in my agreeing to fund the building of a hostel to accommodate at least 75 students. Now I am very happy to see the efficient running of the girls hostel. For this we have to be grateful to the entire staff, the matrons, the kitchen staff, and all who contribute to making the life of the girls, a happy and harmonies one. The success of the girls hostel is reflected in the students achieving high grades in the resent G.C.E (O/L) & (A/L) Exams. We can hope for the boys hostel to achieve similar high standards.

I also have to thank Mr.Nalliah Sriskandarajah for designing the two hostels and for his untiring and diligent supervision of the construction of the both hostels.

I am also aware of Mr.Jesuthnanthar's daily and frequent visits to the hostel to ensure that the building, flower and vegetable gardens are maintained to high standards. His family member's believe that the welfare of the hostels has become an obsession with him at the expense of the family.

I also thank the hostel welfare committee for their time and effort in ensuring the smooth and efficient running of the hostels.

I thank the buildings contractor Mr.Navarathna and his team of workers for their all hard work in building of the boys hostel. Without them there won't be a hostel building.

May the hostels we built together as a team be a happy home for all who living it.

May all live in the hostels, live in harmony, united and trusting each other for the welfare of all.

May the hostels provide a happy home for the children of the Vanni to further their academic sporting and spiritual lives. May they all strive to lead virtuous lives for the welfare of the community the nation and themselves.

**Dr.Wimalraj Jayaratnam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவி மண்ணில் மாணவர்களுக்கோர் விடுதி

இயற்கை வளங்கொழிக்கும் வன்னி மண்ணிலே துணுக்காய் கல்வி வலயத்தில் முத்தாகத் திகழ்வது மு/மல்லாவி மத்திய கல்லூரியே "அன்ன சத்திரம் ஆயிரம் அமைப்பதிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறந்த தர்மம்" அந்த வகையில் சிறந்த கல்வி வசதியை ஏற்படுத்த மல்லாவி மண்ணிலே அமைந்துள்ள மாணவர்கள் விடுதி பெரும்பங்காற்றி வருகின்றது.

கடந்த காலங்களில் மாணவிகளுக்கோர் விடுதியென அமைந்த சேவை இன்று ஆண் மாணவர்களுக்குக்கோர் விடுதியென அமைந்தமை பெரும் பாராட்டிற்குரியது. இன்றைய நிலையில் மாணவிகளின் விடுதியில் 85மாணவிகளும் மாணவர்களின் விடுதியில் 36மாணவர்களும் தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றனர். அம்மாணவர்களிடத்தே மிகச் சிறிய தொகையே அறவிடப்படுகிறது. இத்தொகையைக்கூட செலுத்த முடியாத மாணவர்களிடம் பணம் கூட அறவிடப்படாமல் தங்கி நின்று கல்வி கற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஓர் விடுதி வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இன்றைய பொருளாதார உலகில் தனக்கும், தன் உறவுகளுக்கும் பொருள் தேடும் நேரத்தில் "தானங்களில் சிறந்த தானம் கல்வித் தானம்" என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் பிள்ளைகளுக்கு உதவும் நோக்கில் வைத்திய கலாநிதி அவர்களால் பல மில்லியன் ரூபா செலவில் இரண்டு விடுதிகளை அமைத்தது மட்டுமன்றி அதற்கான பராமரிப்பாளர்கள் ஏனைய உதவியாளர்கள் தோட்டத்தில் பண்ணையில் தொழில் புரிவோர் என்பவர்களுக்கும் ஊதியத்தை வழங்குவது மட்டுமன்றி இங்கே தங்கி நின்று கல்வி கற்கும் மாணவர்களின் பிற தேவைகளுக்காகவும் தனது பணத்தை இன்றுவரை செலவிட்டுக் கொண்டிருப்பது யாராலும் இயலாத காரியம் என்றே கூற வேண்டும். இது மட்டுமன்றி வைத்தியகலாநிதி அவர்களின் நிதி அனுசரணையாக இருந்தபோதும் விடுதியினுடைய போசகராக திரு.ந.சிறீஸ்கந்தராசா பிரதிப்பணிப்பாளர், நீர்பாசனத்திணைக்களம், வவுனியா அவர்களும், அவரது திணைக்கள உத்தியோகத்தர்கள் சிலரும் தமது உடல் உழைப்புக்களை எமது கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்குவகிக்கும் விடுதிகளை அமைக்க உதவியுள்ளனர். அவ்வாறே எமது கல்லூரி முதல்வர் திரு.து.யேசுதானந்தர் அவர்களும் விடுதி நிர்வாகத்தை ஓர் சிறந்த முகாமையாளராக இருந்து இயக்கிவருவதை நாமும் எதிர்காலச் சந்ததியும் நன்றியுடன் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடுதியிலுள்ள வசதிகளை நாம் நோக்கின் சகல மாணவர்களுக்கும் தளபாட வசதிகள் கட்டில், மெத்தை, அலுமாரி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. சுத்தமான காற்றோட்டமான இடவசதிகள், கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானம், அழகிய பூந்தோட்டம் தாமரைத் தடாகம், இரசாயன வளமாக்கிகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் பாவிக்காத மரக்கறி உற்பத்தி, வாழை, பப்பாசிப்பழ உற்பத்தி என்பன பிள்ளைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன.
அவற்றுடன் முட்டை, பால், என்பவற்றைப் பூரண உணவாக அவர்களுக்கு வழங்குவதற்காக கோழிப்பண்ணை உருவாக்கம், பசுக்கள் வளர்த்தல் என்பனவும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கவை.

எல்லாவிடயங்களையும் எழுத்துருவில் உள்ளடக்க முடியாத போது வைத்தியகலாநிதி விமல் ஜெயரட்ணம் பற்றி இன்னும் சிலவற்றை எழுதித்தான் ஆகவேண்டும். ஒரு சாதாரண சமூக சேவைத்தொண்டனுக்கு மேலாக உயர்ந்த ஒரு உன்னத சேவையாற்றும் நிலை என்னவென்றால் ஒவ்வொரு தடவையும் விடுதிக்கு வரும்போது அங்குள்ள பிள்ளைகள் பணியாளர்களுக்கு தனது கையாலே தேடித்தேடி எடுத்த பொருட்களுடன்தான் இங்கு வருவார். வைத்தியர் வருகின்றார் என்றால் எல்லோர் மனதிலும் ஓர் ஆனந்தம் அவ்வாறான நிலையை எங்கு நாம் காண முடியும். இவ்வாறாக மல்லாவி மண்ணிலே உதித்த ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதிப் பிள்ளைகள் இரண்டு குடை நிழலில் தங்கியிருந்து கல்வி கற்பது மத்திய கல்லூரிக்கும் பெருமைதான். இங்குள்ள மாணவர்களிடம் ஒழுக்கவிழுமியம் மேம்படுத்தல், ஆன்மிகச்செயற்பாடுகள், யோகாசனப்பயிற்சி, பெரியோரைக் கனம்பண்ணல் போன்ற ஆளுமைப்பண்புகளின் விருத்திகளைக் காணலாம். அத்தோடு தாயை இழந்த, தந்தையை இழந்த, இருவரையும் இழந்த பிள்ளைகளுடைய பிரச்சனைகள் மனஅழுத்தங்கள் தனிப்பட்ட முறையில் இனங்கண்டு சரியான தீர்வுகளை வழங்கிவருவது எமது கல்லூரி முதல்வரின் தனித்துவத்தை பறைசாற்றி நிற்கின்றது.

ஒட்டுமொத்தமாக இன்று போக்குவரத்து தொடர்புகள் குறைந்த இடங்களான மூன்று முறிப்பு, பனங்காமம், நட்டாங்கண்டல், சிறாட்டிக்குளம், ஒலுமடு, அம்பகாமம், தண்டுவான், கிராஞ்சி, வேரவில், ஜெயபுரம், முழங்காவில், தேறாங்கண்டல், ஐயன்கன் குளம், புத்துவெட்டுவான் போன்ற இடங்களிலிருந்து தரம் ஆறு தொடக்கம் உயர்தரம் வரை கல்வி கற்கும் தேவையுடைய மாணவர்களுக்கு விமல் ஜெயரட்ணம் அவர்களுடைய விடுதிகள் என்னும் இரு குடைகளும் நிழல் பரப்பியுள்ளமை யாராலும் மறக்கவோ/ மறுக்கவோ முடியாத உண்மையாகவுள்ளதால் ஜெயதீபம் இதழ்-II இற்கு இவ்வாக்கத்தை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

நன்றி

**திருமதி.சு.இராசேந்திரம்.**
பிரதி அதிபர்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
யோகபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM A WELL WISHER

It gives me great pleasure to pen this message in the souvenir "Jeyatheepam- 2" and sincerely thank the principal and the editorial group for the opportunity extended to me.

Mu/Mallavi Central College is a national school serving two divisional secretariat divisions, which are Manthai East and Thunukkai.

Both comprise of a number of isolated villages where children are unable to continue their studies due to the lack of transport facilities to get to school and back.

Fortunately, the new hostel which was constructed successfully, provides the much needed facilities for accommodation to the students in order to continue their studies.

Dr Wimal Jeyaratnam took the initiative and constructed a girl's hostel and also a boy's hostel with an auditorium and visitors' quarters.

Dr Wimal Jeyaratnam who resided in Colombo later moved to London during the early 70's had a successful career since.

Though he has had no association to Mallavi, he has kindly has chosen to provide our community with hostels for Mu/Mallavi Central College to help support the education process of our students.

Not only has he provided the students with a place to stay, he has also generously provided sports equipment and facilities, farms for cattle breed and agricultural produce for students to use and improve their wellbeing.

In addition to this, a number of deep-water wells have been built to have easy access to fresh clean water.

Parallel to the construction he introduced a funding mechanism through arrangements for sustainable maintenance of the hostels.

I also extend my sincere Thanks and appreciation to the Dear Wife and Son of Dr Wimal Jayaratnam's as they have been an inspiration and great support throughout this project by contributing a lot of their hard work and time towards the success of this project.

This generosity has helped students and families financially as their parents were unable to support the children in such manner.

Dr.Wimal Jayaratnam and his family have improved hundreds of lives by this meritorious gesture.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I have had the opportunity to visit him on our visits to Colombo and was highly impressed with the hospitality and kindness that showed his eagerness to help the children at the Mallavi hostel.

I also appreciate the untiring efforts of the Principal, Mr.Jesuthananthar, who was very keen to develop the school and the surrounding area. With the assistance received from Dr.Wimal Jeyaratnam, he has been successful in achieving his ambition.

In conclusion, my warm wishes for the school to reach greater heights and bring about outstanding performance through the students of the hostels and function successfully to serve the needs of the area.

**Renuka Sriskandarajah.**



*"பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே.*
*உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்.*
*ஏனென்றால் பொய் வாழவிடாது.*
*உண்மை சாகவிடாது."*

*- சுவாமி விவேகானந்தர்-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவிலிருந்து மல்லாவி விடுதிகள் நோக்கிய பார்வை....

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு"

என்று பொய்யாமொழிப்புலவன், திருவள்ளுவர் குறிப்பிட்டது போல், நீரினால் நிறைந்த ஊருணி ஆனது வேறு எந்த ஒரு குடிநீர் வசதிகளும் இல்லாத ஒரு கிராமத்திற்கு எந்த அளவுக்கு பயனுள்ளதாக இருக்குமோ அந்த அளவிற்கு பயனுள்ள வகையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா ஏற்பாட்டினால் கிட்டத்தட்ட எழுபதுக்கு மேற்பட்ட பழைய மாணவர் நலன்விரும்பிகள், புலத்தில் உள்ள தன்னார்வத் தொண்டர்களின் அனுசரணையுடன் யாழ் இந்துக் கல்லூரி கனடாச் சங்கத்தின் தமிழ் மாணவர் உதவித்திட்டம் தற்பொழுது தாயகத்தில் **"ஊருணி செயற்றிட்டம்"** ஆக உருப்பெற்றுள்ளது.

எமது சமூகத்தின் பலமும், அதன் எழுச்சியும் அந்தச்சமூகம் பெறுகின்ற கல்வி அளவில் பெரிதும் தங்கியுள்ளது. அதற்கு இன்று யாழ் இந்துக் கல்லூரிச் சங்கமானது கிட்டத்தட்ட 25 வருடங்கட்கு மேலாக இயங்கிவருகின்ற போதிலும், தற்போதைய எமது சமூகநலன் தேவைகருதி 2009க்கு பிற்பாடு, ஆரம்பத்தில் 10பல்கலைக்கழக மாணவர்களின் நலன்கருதி அவர்கட்கு பண உதவிகள் வழங்கப்பட்டது. அத்துடன் நாம் நின்றுவிடாமல் இன்று எமது அமைப்பானது கிட்டத்தட்ட 500 மாணவர்களின் கல்வி சம்பந்தமான செயற்பாட்டில் முன்னின்று தம்மாலான உதவிகள் செய்துவருகின்றது.

எமது பணியானது தமிழ் பிரதேசங்களில் பல திட்டங்களை செயற்படுத்திவருகின்ற போதிலும் Skype மூலம் ஆங்கிலம் கற்பித்தல் என்னும் முன்மாதிரியான, செயற்றிட்டத்தை மு/மல்லாவி மத்திய கல்லூரி பெண்கள் விடுதியில் சென்ற வருடம் மார்ச் மாதமளவில் யதார்த்தமாக ஆரம்பித்துள்ளோம்.

உண்மையில் இவ் மாணவிகளுக்கு கல்வி கற்பிப்பதில் நானும் எனது குடும்பத்தாரும் கற்பிக்கும் ஆசிரியர் மற்றும் ஊருணி செயற்றிட்டக் குழுவிலிருக்கும் அனைவரும் நிறைவான ஒரு சந்தோசமான மனநிலையைப் பெற்றுள்ளோம்.

இறைவன் இப் பூமியில் அழகுபடுத்த வைத்த மொட்டுக்கள்தான் இப் பிள்ளைகள். இன்றைய பிள்ளைகளே நாளைய தலைவர்கள். நாளைய உலகை ஆளப்போகின்றவர்கள். அவர்களது கையில் தான் நாளைய உலகமே தங்கியுள்ளது.

இன்றைய உலகில் இப்பிள்ளைகளிடம் உள்ள அன்பு, பண்பு, பாசம், நட்பு மற்றும் குழுச்செயற்பாடுகள் போன்ற உணர்வுகள் படிப்படியாக அவர்களிடமிருந்து மறைந்து போகாமல் அவர்களை ஒன்றிணைத்து மிகவும் நாகரீகம் பொருந்திய நல் மாணாக்கர்களாக உருவாக்க இவ்விடுதிப்பணி மிகவும் சிறந்த ஓர் கோவில் ஆகவே எமக்குத்தென்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடுதிகள் நாகரீகமான இடம் மட்டுமன்றி, இக்காலச் சூழ்நிலைகளிற்கு ஏற்ப நற்பாதுகாப்பு மையமாகவும் திகழ்வதைக்கண்டு பேரானந்தம் அடைகின்றோம். இப்பிள்ளைப்பருவத்தில் மிகமுக்கியமான இனிமைக்காலம் பாடசாலை செல்லும் காலந்தான் அதுதான் அவர்கள் பாடும் குயில்களாகவும், ஆடும் மயில்களாகவும், துள்ளித்திரியும் மான்குட்டிகளாகவும் நட்பு என்னும் உன்னத பந்தத்தில் ஒரு தாய் பிள்ளைபோல் வாழும் இடமாக இவ்விடுதிகள் பள்ளியுடன் இணைந்து நன்மாணாக்கர்களை உருவாக்குகின்றது.

அதுமட்டுமன்றி இன்றைய கால கட்டத்தை எடுத்துநோக்குவோமானால் எத்தனையோ பிள்ளைகள் குடும்பச்சூழ்நிலை காரணமாகப் பாடசாலை செல்லாமல் இருக்கின்றனர். ஆனால் அவர்களது கனவுகளும், ஆசைகளும் அவர்கள் கட்டிய மனக்கோட்டைகளும் மணற்கோட்டைகளாக இடித்து நொருக்கப்படுகின்றது. அவ்வாறான குடும்ப சூழ்நிலையிலிருந்து மீட்டு சமூகத்தில் அவர்கள் எதிர்காலத்தில் மிளிரும் தீபச்சுடர்களாக உருவாக்குகின்ற இவ்விடுதிகளின் வினைகள் கண்டு வியப்படைகின்றோம்.

ஆகவே இவ்விடுதிகளின் பணியில் நாமும் பங்கெடுக்கும் வகையில் இக்கல்விச் செயற்பாட்டில் ஆரம்பித்து மாணவர்களது கலைகள் கண்டும், அவர்கள் நிலைகள் கண்டும் அவர்களுக்கு கல்வியைப் புகட்டுவது மட்டுமன்றி அவர்கள் மத்தியில் பல மாறுதல்களை உருவாக்கி மழலைமொழி கேட்டு மகிழ்வடைவோம் எனவும், தாயகம் விட்டுச் சென்று வெளிநாட்டிலிருக்கும் நம்மவர்கள் தலைமுறை தலைமுறையாக தாயகத்தின் தனித்துவத்தை அறியவேண்டும் என்பதற்காகவும், அத்தாயகத்து தலைமுறைகளை கஷ்ரம் என்னும் காலன்வந்து காவுகின்றபோது வெளிநாட்டிலிருக்கும் தாயகத்து தலைமுறைகள் அவர்களை தாங்கிக்கொள்ளவும் ஏங்குகின்ற ஏராளமான இளைஞர் சமுதாயத்தை இங்கே உருவாக்க முனைகின்றோம்.

நமது பணி இன்றுடன் நிறைவு பெறாது இனிவரும் சந்ததியினரையும் வளப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டுத் தொடர்புகளை புலம்பெயர் நாட்டுடன் ஏற்படுத்தி வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொடுப்பது மட்டுமன்றி வெளிநாட்டு இளைஞர்கள் தாயகத்து இளைஞர்களுடன் நல்ல ஆரோக்கியமான தொடர்பாடலை மேம்படுத்தி நல்லுறவைப் பலப்படுத்தி இவ் விடுதியுடன் இணைந்து நல்லதொரு எதிர்காலமுடைய தமிழ் இளையோர் தலைமுறையை உருவாக்குவோம் என்றெண்ணி உங்கள் அனைவரதும் ஆதரவோடு வெற்றிகரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஊருணி செயற்றிட்டத்திற்கு தொடர்ந்தும் உங்கள் ஆதரவினையும், ஊக்கத்தினையும் எதிர்பார்க்கின்றோம். உங்களுடைய ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் எங்களுடைய பணி மென்மேலும் விஸ்தரித்தவாறே செல்லும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

"உயர்ந்த இலட்சியத்தை நோக்கி
தெளிவான பார்வையோடு
திடமான நெஞ்சுரத்துடன்
நிதானமாக பயணிக்கும் எமக்கு
நாம் அடைய நினைக்கும் இலக்கு
ஒன்றும் ஒரு தொடுவானமல்ல"

**திரு. திருநாவுக்கரசு புவனேந்திரன்.**
ஊருணி செயற்றிட்டம்,
யாழ்/இந்துக் கல்லூரிச் சங்கம்,
கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதியில் எனது சேவைக்காலம்

மு/மல்லாவி மத்திய கல்லூரி ஆண் மாணவர் விடுதித் திறப்புவிழாவில் கலந்து சிறப்பிக்கும் பெரும் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டதில் மகிழ்வடைகின்றேன். மாணவிகள் விடுதி ஆரம்பித்து மூன்று வருடங்கள் கடந்த நிலையில் நான் இவ்விடுதியில் சேர்ந்து கொண்டேன். 27.12.2015 அன்று அருட்சகோதரிகளிடம் (கௌசல்யா) இருந்து சில கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

விடுதி காலத்தின் தேவை கருதியும், நவீனத்துவத்தின் தேவைகருதியும் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. விடுதியில் மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கான வசதிகளுடன் தமது தேவையை தாமே பூர்த்தி செய்யும் வகையிலும், அனுபவங்களைப் பெறும் வகையிலும் பயிர்கள், பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளது.

அதிபர் அவர்களின் அயராத அர்ப்பணிப்பால் விடுதியின் அருகிலுள்ள நிலங்கள் சோலைகளாகின. பழமரக்கன்றுகளும், பசுமைத் தோட்டங்களும் பார்ப்பவர் மனதை கொள்ளை கொள்கின்றது. மாடு வளர்ப்பும், கோழி வளர்ப்பும் ஒருங்கே சேர்ந்து எமது வளத்தை மெருகூட்டுகின்றன. இவற்றினால் வரும் பயன்கள் விடுதியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மேலதிகமானவற்றை விற்பனை செய்து வரும் வருமானத்தில் அரைப்பங்கு பாடுபடும் எமக்கு கிடைப்பதும் மகிழ்ச்சியாக உள்ளது.

தோட்டங்கள், கோழி, மாடு பராமரிக்கும் பகுதிகளையும் பராமரித்து வருவோம். விடுதி வளாகத்தில் தென்னை, மாமரம், மரமுந்திரிகை போன்ற நீண்ட காலப் பயிர்களும், மரக்கறித் தோட்டங்களையும் பராமரித்து வருகின்றோம். ஆரம்பத்தில் தண்ணீர்ப் பிரச்சனையை எதிர்கொண்ட எமக்கு அதிபர் அவர்களின் முயற்சியால் தண்ணீர் பிரச்சனை தீர்ந்துள்ளது.

**"இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும், விதைத்துக் கொண்டே செல்ல வேண்டும்"** என்ற இறையன்பு அவர்களின் வாக்கிற்கிணங்க நாங்கள் இயங்கிக்கொண்டும், விதைத்துக் கொண்டும் இருக்கின்றோம். அதனால் நாங்கள் எப்போதும் விடுதியில் மகிழச்சியாக இருக்கின்றோம்.

விடுதியில் தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவர்கள் பல சூழலில் இருந்து இங்கு வருகிறார்கள். அவர்கள் வாழ்ந்த சூழலுக்கேற்ப அவர்களுடைய குணம், நடத்தை காணப்படும். அவற்றையெல்லாம் அறிந்து அவர்களுக்கான கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் உளநல மேம்பாட்டினையும் அவ்வப் போது செய்து வருகின்றோம்.

எமது விடுதிகள் மாணவர்களைத் தாங்கி கல்விக்காக தம்பணி ஆற்றிவருகின்றது. இப்பணிகளைத் திறம்படச் செய்து வரும் அனைத்து பெரியவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


**திருமதி அ.திலகவதி.**
மாணவிகள் விடுதிப்பணியாளர்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கல் நாட்டும் வைபவத்தின் போது















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதிக் கட்டுமானப் பணியின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதி ஆரம்ப சமய நிகழ்வுகளின் போது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவி மண்ணில் நம் மகத்தான பணி

முல்லை மண் தனிலே முத்தான
நெல்லை விளைவிக்கும் சொத்தான
மல்லாவி மண்தனிலே
விந்தை பல புரியும்
வித்தான விடுதிகளின்
சிந்தை மகிழும் சிறப்பான பணிதனை
எந்தைக்கும் தாய்க்கும்
எல்லோர்க்கும் உரைப்போம்
-காண்பீர்-

துயரங்கள் வந்து
துரத்தும் வேளையிலும்
துவழ்ந்து போகாது
தவழ்ந்து பின் நடந்து
மகிழ்ந்து கவிபாடி
எழுந்து நிமிர்ந்து - மொட்டு
அவிழ்ந்த மலரென
செழித்துச் சிறப்பிக்கும் விடுதி

பஞ்சமா பாதகம் மலிந்த
எம் புவியினிலே
அஞ்சாமல் போராடும்
ஆற்றலினை வளர்க்கவல்ல
அருமையான பணியெமக்கு
நெஞ்சோடு அதை நிறுத்தி
துஞ்சாமல் ஒருபோதும்
அஞ்சாமல் புரிகின்றோம் அதை!

போட்டிகள் பல நிறைந்த
போராட்ட வாழ்க்கையிலே
ஏட்டிக்குப் போட்டியாய் - எல்லோரும்
கூட்டிவந்து சேர்க்கும்
பேட்டி பல கண்டெடுத்த - மாணவரின்
காட்டி நிற்கும் பேதமைகள் - களைந்து புதுப்
போட்டிக்கு தயாரிக்கும் விடுதியிது

இங்கு,
அல்லும் பகலும்
அயராது உழைக்கும்
கல்லும் முள்ளும் பாராது
கடமை செய்யும் பண்பினை
சொல்லும் செயலும்
சிறந்த மாணவ மணிகளை
-வளர்த்திடும் பணியெமதே.....-

**– பெண்கள் விடுதிக்காப்பாளர்கள் –**
மாணவிகள் விடுதி,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
(தேசிய பாடசாலை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு/மல்லாவி மத்திய கல்லூரியின் மாணவர் விடுதிகள் – ஓர் வரலாற்று நோக்கு

21ம் நூற்றாண்டின் 2ம் தசாப்தத்தின் ஆரம்பத்தில் யுத்தம் ஓய்வுற்று மீள் குடியேற்றத்தின் பின்னரான காலப்பகுதியில் மாணவர் விடுதியின் அவசியத்தை உணர்ந்து கொண்டு அதிபர் திரு.து.யேசுதானந்தர் நீண்டநாள் சிந்தனையின் வெளிப்பாடாக இன்றைய மல்லாவி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் அருகாமையில் முன்பு வலயக்கல்வி அலுவலகமாக தொழிற்பட்டுக்கொண்டிருந்த கட்டடத்தை மாணவர் விடுதியாக மாற்றுவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தார். எமது பாரம்பரியங்களுக்குகேற்ப சம்பிரதாய பூர்வமாக 07.03.2013 அன்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திரு.நா.வேதநாயகம் துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர், திருமதி மாலினி வெனிற்றன், நல்லாயன் சபையைச் சார்ந்த அருட்சகோதரிகள் மற்றும் பாடசாலை சமூகத்தவர்களில் முன்னிலையில் அனைவரது பேராதரவுடனும் இவ்விடுதி உதயமாகியது.

மு/மல்லாவி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையாக மாற்றப்பட்டதை த் தொடர்ந்து கல்வி அடைவு மட்டத்தினை உயர்த்தவும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கும், மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கவும் மாணவர் விடுதி ஒன்றை அமைப்பது நல்லதோர் உபாய வழியாக நோக்கப்பட்டது. கல்லூரி அதிபர் திரு.து.யேசுதானந்தர் அவர்களின் அயராத முயற்சி, அளப்பெரும் ஆற்றல் காரணமாக உரிய வளங்களை இனம்கண்டு வலயக்கல்விப் பணிப்பாளரின் முறையான அனுமதியுடன் ஆறு மாணவிகள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். மாணவிகளின் பாதுகாப்பு நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பாக நல்லாயன் சபையின் அருட்சகோதரி சிறிய புஸ்பம் அவர்கள் மற்றும் அருட்சகோதரி கௌசலா அவர்களும் நியமிக்கப்பட்டனர். அவர்களின் அர்ப்பணிப்பு, அயராத உழைப்பு தியாக மனப்பாங்கு விடுதியின் வளர்ச்சிப் பாதையில் முக்கிய மைற்கல்லாக அமைந்தது.

முன்னாள் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் மாலினி வெனிற்றன் அவர்களின் பணிப்பின் பேரில் யுனிசெப் நிதி உதவியுடன் துணுக்காய் கோட்டக் கல்வி அலுவலகமாக செயற்பட்ட கட்டடம் புனரமைக்கப்பட்டு மாணவிகள் விடுதியாக முழுமையாக பயன்படுத்த வழியேற்பட்டது. விடுதியின் ஏனைய அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நிதி உதவியினை முன்னாள் வவுனிக்குளம் பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர் திரு.ந.சிறீஸ்கந்தராஜா அவர்களுடைய ஒழுங்குபடுத்தலின் பேரில் சிறுபோக பங்குகளை பெற்று ஏலவிற்பனை மூலம் பெறப்பட்ட பணத்தினைக் கொண்டு துணுக்காய் பிரதேச செயலாளர். திரு.சி.குணபாலன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் மலசலகூட வசதிகள், நீர்விநியோகம் ஏனைய உபகரணங்கள் பெற்றக்கொடுக்கப்பட்டன. இதன் மூலம் 40 மாணவர்கள் வரை தங்கிக்கற்க கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு ஏற்ப உணவைச் சமைப்பதற்கென முறையான சமையல் கூடம் ஒன்று உலக உணவுத் திட்டத்தின் நிதி அனுசரணையுடன் அமைக்கப்பட்டு பயன்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. விடுதியில் தங்கிக்கற்பதற்குப். பாடசாலைச் சூழலில் வாழும் பிள்ளைகளின் பெற்றோர்கள் அதிகளவில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துக் கொண்டதால் பயனாளர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கு பின்வரும் தகமைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரை இழந்த பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளான பிள்ளைகளுக்கு முன்னுரிமை.

பின்தங்கிய கிராமங்களில் ஆரம்ப கல்வியை முடித்து இடைநிலைக் கல்வி உயர்தரக் கல்வியை தொடர்வதற்கு வசதியற்ற சூழலை கொண்ட பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கல்.

உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவில் கற்க விரும்பும் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கல்.

வீட்டுச் சூழல் கற்பதற்கு ஏற்றவாறு இல்லாத க.பொ.த சாதாரண தரம் க.பொ.த உயர்தரப் பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கான வாய்ப்பினை வழங்கல்.

இவ்விதம் 40 மாணவிகள் இணைத்துக்கொள்ளப்பட்டு விடுதிச் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. விடுதியின் வளர்ச்சியில் மற்றுமொரு மைற்கல்லாக 31.09.2013 அன்று திரு.டக்ளஸ் மேர்வின் வருகை தந்து நிலமைகளை நேரில் கண்டறிந்து உதவுவதாக வாக்குறுதி அளித்ததன் விளைவாக 11.09.2013 அன்று திருமதி கெலின் மற்றும் திருமதி நந்தினி ஆகியோரின் நிதி உதவியுடன் மாணவிகள் கற்பதற்கும். கலைகளை பயில்வதற்குமான கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்து. இதற்கான கேள்வி மனுவினூடாக ஒப்பந்தகாரர் திரு.சோ.சர்வேஸ்வரன்(தீபன்) வேலையைப் பொறுப்பேற்று உரிய காலத்திற்கு முன்னதாகவே கட்டடத்தை அமைத்து நிர்வாகத்திடம் முறையாக கையளித்தார். 11.03.2013 அன்று திருமதி நந்தினியின் தந்தையாரின் நினைவாக அக்கட்டம் ஜீவஇல்லம் என்று பெயர் சூட்டப்பட்டு எளிமையான நிகழ்வுடன் நிர்வாகத்திடம் முறையாக கையளிக்கப்பட்டது. அன்றைய நாளில் அருட்சகோதரி சிறிய புஸ்பம் அவர்கள் பதவியுயர்வு பெறறுச் செல்ல அவரது கடமையை அருட்சகோதரி பற்றீசியா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். விடுதியின் கவின் நிலையைப் பேணும் முகமாக அருட்சகோதரிகள் சிறிய புஸ்பம் மற்றும் அருட்சகோதரி கௌசலா அவர்களின் நிதிப் பங்களிப்புடன் தாமரைத்தடாகம் அமைக்கப்பட்டு அழகுற இன்றும் காட்சி தருகின்றது. மாணவர்களின் உடல், உள ஆற்றலை மேம்படுத்துவதற்காகவும் கற்றல் திறன்களை விருத்தி செய்வதற்காகவும் விடுதி மாணவிகள், அருட்சகோதரிகளான சிறிய புஸ்பம் கௌசலா அவர்களின் நிதிப் பங்களிப்புடன் 19.03.2013 இல் மன்னார் மாவட்டத்திற்கு கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர். 04.02.2013 அன்று சமய பேதமின்றி நல்லினக்கத்தை ஏற்படுத்தும் முகமாக எல்லாப் பிள்ளைகளும் நத்தார் நிகழ்வில் பங்கெடுத்து கொண்டமை முன்மாதிரியான நிகழ்வாக அமைந்தது. இந்நிகழ்வானது.. அனைவரினதும் பாராட்டினைப் பெற்றது. 07.06.2014 இல் Your Friend Foundation நிறுவனத்தில் ஸ்தாபகர் திரு.செவ்வேள்(சட்டத்தரணி) ஆதரவுடன் யாழ்ப்பாணத்திற்குக். கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டனர். 27.09.2014இல் திரு.அன்ரன் மனுவேற்பிள்ளையின் பிறந்த தினத்தை நினைவு கூரும் முகமாக திருகோணமலை மாவட்டத்திற்கு கல்விச்சுற்றலாவை மேற்கொண்டனர். 15.03.2015 அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மாணவிகளின் நிகழ்வு அரங்கேற்றம் செய்யப்பட்டது. மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக பத்து துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இவை இன்றும் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

விடுதி மாணவிகளுக்கான உணவு தயாரிப்பதற்கு ஆரம்பத்தில் திருமதி.இ.வேலாயி அவர்கள் பணியாற்றி வந்தார். அவர் நோய் வாய்ப்பட்டிருந்த சிறிது காலம் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டது. அதில் இடர்பாடுகள் ஏற்படவே ஒரு நிரந்தர சமையலாளரை பெற்றுக்கொள்ளும் முகமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்முகத் தேர்வின் மூலம் திருமதி.நி.வானதி அவர்கள் நியமனம் செய்யப்பட்டு சேவையை தொடர்ந்து வழங்கினார். விடுதியில் தங்கி இருக்கும் 30 மாணவிகளுக்கான உணவு விநியோகத்திற்காக மாதாந்தம் ரூபா 7500 தொகையை சர்வதேச மருத்துவ ஒன்றியம் கிளிநொச்சி அறக்கட்டளை ஊடாக 2016 டிசம்பர் மாதம் வரை வழங்கி விடுதி மாணவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து விடுதி வளர்ச்சிக்கு உதவியமை நன்றி உணர்வோடு நோக்கத்தக்கது.

மேலும் மாணவிகள் பாதுகாப்பாக இரவு வேளைகளில் உறங்குவதற்கான கட்டில், மெத்தை மற்றும் அலுமாரி போன்றவற்றை 'World Vision' நிறுவனத்தினர் வழங்கி வசதியினை மேம்படுத்தி பாராட்டுதலுக்குரியது.

விடுதியின் பொறுப்பாளர்களாகச் செயற்பட்ட அருட்சகோதரிகள் பற்றீசியா மற்றும் கௌசலா அவர்களும் மாணவிகளைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் உயர்நிலையை அடைய சுமுகமான நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்தி விடுதி மீதான நம்பிக்கையும் பற்றுறுதியும் கட்டியெழுப்ப அரும்பாடுபட்டனர். இவர்களின் முயற்சிக்கு வலுச்சேர்க்கும் முகமாக SMILE குழரனெயவழைெ ஆனது மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி மாணவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டினர் .

28.01.2015 அன்று திரு.குகனேந்திரம் அவர்களின் நிதியுதவியுடன் கோட்டமாகச் செயற்பட்ட நிலப்பரப்பு கறையான் புற்றுக்களை கொண்டிருந்தமையால் கறையான் மருந்து அடிக்கப்பட்டு சீமெந்து இடப்பட்டு செப்பனிடப்பட்டது இது வளர்ச்சியின் மற்றுமொரு அங்கமாகும். விடுதியின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய திருப்பமாக அமைந்த நிகழ்வு 08.01.2015 அன்று கொடையாளர் மதிப்பிற்குரிய வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் திடீர் வருகையாகும். இவ்வருகையின் பின்னர் விடுதி நிர்வாகத்தின் மீது ஏற்பட்ட நம்பிக்கையின் விளைவாக சகல நவீன வசதிகளுடன் கூடிய முறையான விடுதி ஒன்றை அமைத்து தருவதற்கான நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார் அதற்கான செயல் வடிவமாக பொறியியலாளர் திரு.ந.சிறிஸ்கந்தராசா (உதவிப்பணிப்பாளர் நீர்ப்பாசனத் திணைக்களம், முல்லை மாவட்டம்) அவர்கள் மூலம் விடுதிக்கான திட்டவரைபடம், மதிப்பீடுகள் என்பன மேற்கொள்ளப்பட்டு கேள்வி மனுக்கோரப்பட்டது. இதன் பின்னர் 08.09.2015 அன்று வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் திருக்கரங்களால் அத்திவாரம் இடப்பட்டது. இந் நிகழ்வில் பொறியியலாளர் திரு.சிறீஸ்கந்தராசா வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி, கல்லூரி அதிபர் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள், விடுதிப்பொறுப்பாளர்கள், பெற்றோர்கள், மாணவிகள், சமயப்பெரியார்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். கே.பி.கே நிறுவன ஒப்பந்தக்காரர் திரு.பகீரதன்(நேசன்) அவர்களால் வேலை பொறுப்பேற்கப்பட்டு, கிளிநொச்சி அறக்கட்டளை அமைப்பினூடாக ஒப்பந்தம் கைச்சாந்திடப்பட்டு அவர்களின் மேற்பார்வையாளர்களின் கீழ் உரிய தரத்துடன் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மாணவிகளின் பாதுகாப்பிற்காக மூன்று ஏக்கர் விஸ்திரமான நிலப்பரப்பில் சுற்றுமதில் அமைத்து கொள்வதற்காக செலவினையும் வைத்திய கலாநிதி அவர்களே ஏற்று வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று 2017ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. விடுதிக்கான மின்சாரம் சூரியப்படலம் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு தேசிய மின்வலையமைப்புடன் இணைக்கப்பட்டதன் மூலம் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மூலம் வருவாய் ஈட்டிக்கொள்ளக்கூடிய புதிய தொழில்நுட்பமும் புகுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாணவிகளுக்கு கல்வி புகட்டுவதற்கான 30X20 அடி கொண்ட அரை நிரந்தரக்கட்டடம் அமைத்துக் கொடுத்தமை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்கு வசதியாக அமைந்தது. அத்துடன் கொடையாளர் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் தானே விடுதிப்பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க உடன்பட்டதன் விளைவாக விடுதியின் செயற்பாடுகள் வினைத்திறன் கொண்டதாக மாறிவிட்டன. கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டதற்கு அமைய தொடர்ந்து கொடை வள்ளல் ஜெயரட்ணம் அவர்கள் பால் நிலை சமத்துவத்தை பேணுவதற்காக ஆண்கள் விடுதி ஒன்றை அமைப்பதற்கு திருவுள்ளம் கொண்டு அதற்கான செயல் வடிவம் கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு அதற்கான திட்ட வரைபடத்தை பொறியியலாளர் ந.சிறீஸ்கந்தராசா அவர்கள் தயாரித்து அதற்காக நிதிஒதுக்கீட்டினை மேற்கொண்டதன் விளைவாகப் பாடசாலையின் தென்மேற்கு மூலையின் இயற்கைக்கு மேலும் அழகு சேர்க்கும் வகையில் ஆமை வடிவில் அமைந்த அழகிய கட்டடம் அமைக்கும் பணி 2018 அன்று ஆரம்பிக்கப்பட்டது. சைவ சமயக்குருக்கள், அருட்தந்தை மற்றும் பாடசாலை முதல்வர் விடுதியின் தந்தை திரு.து.யேசுதானந்தர், திட்டப் பொறியியலாளர் திரு.நா.சிறீஸ்கந்தராசா, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர், மாணவர்கள், கல்வியியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் முன்னிலையில் மிகவும் சிறப்பான சமய அனுஸ்டானங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து கட்டட ஒப்பந்தக்காரர் U.N.D.நவரட்ண வேலையைப் பொறுப்பேற்று துரிதகதியில் மேற்கொண்டு உரிய காலத்தில் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டு ஆண் விடுதிக்காப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டு 2019 ஆண் மாணவர் விடுதிக்கான மாணவர்கள் 3ம் தவணையில் இருந்து சேர்க்கப்பட்டனர். கொடையாளர் வைத்திய கலாநிதி ஜெயரட்ணம் விடுதிச் சூழலினை பசுமையுடன் வைத்திருப்பதுடன் விடுதிக்கான நிரந்தர வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக பயன்தரக்கூடிய மாங்கன்றுகள், மரமுந்திரிகை, பப்பாசி, வாழை தென்னைமரக்கன்றுகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டு பயிரிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மாணவர்களின் போசாக்குத் திறனை மேம்படுத்துவதற்கான கறவைப் பசுக்கள், கோழிப் பண்ணைக் மருந்தற்ற மரக்கறி செய்கைகள் அவற்றிலிருந்து உரிய பலனைப் பெற்று மாணவர்களின் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு மேலதிகமானவை விற்பனை செய்து அதிலிருந்து கிடைக்கும் இலாபத்தின் ஒரு பகுதியினை பணியாளர்களுக்கும் பகிர்ந்து கொள்ளக்கூடிய முறையில் வழிகாட்டியுள்ளார்.

மேலும் ஆண்மாணவர்களுக்கான கொங்கிறீற்றுத் தூண் இடப்பட்ட வேலி அமைக்கப்பட்டது. குடிநீர், தோட்டச்செய்கைக்காக குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு நீர்த்தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஆண் மாணவர்விடுதியில் விசேட விருந்தினர்கள், வளவாளர்களுக்கென குளிரூட்டல் வசதிகளுடன் கூடிய படுக்கை அறைகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசினால் கூட இவ்வாறான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க சிரமமான நிலையில் தனிநபராக சிந்தித்து இரண்டு விடுதிகளையும் அமைத்துக்கொடுப்பதற்கு வேண்டிய நிதிபங்களிப்பு நிர்வாகச் செலவுகளுக்காகவும் பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான நிதிஉதவி என பலமில்லியன் கணக்கில் நிதியை செலவு செய்து இரண்டு விடுதிகளையும் அமைத்து அவற்றை இயங்குநிலையில் வைத்திருப்பதற்கு வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் மற்றும் அவரது துணைவியாரை தவிர வேறு எவராலும் இத்தகைய கைங்கரியத்தைச் செய்ய முடியாது இந்த மனித குலம் நிலைத்திருக்கம் வரை அவரது பெருந்தன்மையை மறவாது. அவரது கனவைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும் சிறந்த மாணவப் பரம்பரையை உருவாக்கவும் இந்த விடுதிகள் இரண்டும் நின்று நிலைத்து பெருவிருட்சமாக இந்த சமூகத்திற்கும் நாட்டிற்கும் முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என உளமார வாழ்த்துகின்றேன்.

**திரு.இ.நிக்சன்,**
(பழைய மாணவன்)
அதிபர்,
மு/கல்விளான் அ.த.க. பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்புரிமைப் பொறியியல் தொழினுட்பம் – ஓர் பார்வை

(Genetic Engineering technology)

பிறப்புரிமைப் பொறியியற்றொழினுட்பமானது பிறப்புரிமை மாற்றியமைத்தல் அல்லது பிறப்புரிமை மீள்கட்டுமானம் என்ற கருத்துப்படவும் நோக்கப்படும். அதாவது குறித்தவோர் உயிரினத்தின் பரம்பரை அலகுகளானவை உயிரியல் தொழினுட்ப முறைகளினூடாக மாற்றியமைக்கப்படுதலே பிறப்புரிமைப் பொறியியல் தொழினுட்பமாகும். இங்கு குறித்த சில தொழினுட்பத் தொகுதிகளின் உதவியினைக்கொண்டு கலமொன்றின் பிறப்புரிமைக் கட்டமைப்பானது மெருகூட்டப்படுகின்றது. இது குறித்த இனங்களிலும் மற்றும் இனங்களுக்கிடையிலும் பரம்பரை அலகுகளின் மாற்றத்தின் ஊடாகச் சாத்தியமாகின்றது. இங்கு பெரும்பாலும் பயன்படுத்துகின்ற புதிய DNA ஆனது DNA பிரித்தெடுப்பின் மூலமாகவோ, DNA பிரதியெடுப்பின் மூலமாகவோ அல்லது செயற்கை முறையில் தொகுக்கப்பட்ட DNA ஆகவோ பெறப்படலாம். செயற்கை முறையில் தொகுக்கப்பட்ட DNA ஆனது DNA மீளச்சேர்க்கைத் தொழினுட்பத்தின் ஊடாகப் பெரும்பாலும் பெறப்படுகின்றது. இவ் DNA ஆனது விருந்து வழங்கிக் கலங்களினுள் பின்பு செலுத்தப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றது. முதன்முதலில் குரங்கிலிருந்து அறியப்பட்ட SV40 வைரசினையும் டுயஅனய வைரசினையும் பயன்படுத்தி Paul Berg என்னும் விஞ்ஞானி முதலாவது மீளச்சேர்க்கை DNA இனை உருவாக்கினார். இதன் பின்பே பிறப்புரிமைப் பொறியியல் தொழினுட்பம் அதிகம் விருத்தி கண்டது எனலாம். இப் பிறப்புரிமை பொறியியலானது Jack williamson என்ற விஞ்ஞானியால் முதன் முதலில் "Genetic engineering" எனப் பெயரிடப்பட்டது.

1973ஆம் ஆண்டளவில் Herbert Boyer and Stanley Cohen என்ற இரு விஞ்ஞானிகள் முதன்முதலில் பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைக்கப்பட்ட உயிரினங்களை உருவாக்கிக் காட்டினார். இவர்கள் Escherichia coli பற்றீரியாவின் Plasmid உடன் நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பரம்பரை அலகினை (Antibiotic resistance genes) இணைப்பதன் மூலம் இதனை உருவாக்கிக் காட்டினார்கள். இதனைத் தொடர்ந்து வந்த வருடத்தில் Rudolf Jeanish என்ற விஞ்ஞானி எலியின் முளையத்தினுள் DNA ஐ இணைத்ததின் ஊடாக உலகின் முதலாவது பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைக்கப்பட்ட விலங்கினை உருவாக்கி வெற்றியீட்டினார்.

## முறைவழியாக்கம்

பிறப்புரிமைப் பொறியியல் தொழினுட்பம் மூலமாக உருவாக்கப்படுகின்ற பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைக்கப்பட்ட அங்கிகளை உருவாக்குகின்ற செயற்பாடானது பல்வேறு படிநிலைகளைக் கொண்டதாகும். இதன் ஆரம்ப கட்டமாக விருப்பத்திற்குரிய பரம்பரை அலகானது தெரிவு செய்யப்படல் வேண்டும். பின்பு உரிய விருந்து வழங்கிக் கலமானது தெரிவுசெய்யப்பட்டு மூலக்கூற்றுக் காவிகளின் (molecular vectors) உதவியின் ஊடாக இவை உட்செலுத்தப்பட்டு மீளச்சேரக்கை அடைந்தது உறுதி செய்யப்படுவதனூடாக விளைவுகள் ஈட்டப்படும்.

ஆரம்ப கட்டமாக விருப்பத்திற்குரிய DNA ஐ கொண்டுள்ள கலத்திலிருந்து DNA ஆனது பிரித்தெடுக்கப்படும். இவ்வாறு பிரித்தெடுக்கப்படும் DNA இலிருந்து மூலக்கூற்று கத்திரிகளான (restriction enzymes) நொதியங்களின் உதவியுடன் DNA ஆனது சிறிய துண்டுகளாக்கப்படும். இவ்வாறு சிறிய துண்டுகளாக்கப்பட்ட DNA ஆனது பொலிமரேசு சங்கிலித்தாக்கத் தொழினுட்பத்தின் (PCR) உதவியுடன் மடங்காக்கப்படும். இவ்வாறு மடங்காக்கப்பட்ட DNA துண்டுகள் பின்பு ஜெல்மின்னயனம் மூலமாக வேறாக்கப்படலாம். இங்கு கிடைக்கப்பெற்ற DNA துண்டுகள் பிளாஸ்மிட்டுடன் (Plasmid) இணைக்கப்பட்டபின்பு விருந்து வழங்கி கலத்தினுள் செலுத்தப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உட்செலுத்தப்பட்ட பிளாஸ்மிட் ஆனது பற்றீரியா பிரிவடையும் போது பெருக்கமடையும். இச்செயன்முறையின் ஆரம்பத்தில் பரம்பரை அலகு உட்புகுத்தப்படுவதற்கு முன்னால் முன்னேற வழிப்படுத்தும் கூறு (Promoter), நிறுத்தும் கூறு (terminator), அடையாளப்படுத்தப்படும் பரம்பரையலகு (Marker gene) போன்றவையும் இணைக்கப்படும்.

இதன் மூலமாக இச்செயன்முறையானது முன்னெடுத்துச் செல்லப்படுவதுடன் ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள் எக்கலங்கள் வெற்றிகரமாகப் பிறப்புரிமை மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என இனங்காணவும் உதவுகிறது. அத்துடன் இந்நிலையிலே மேம்பட்ட பரம்பரை அலகானது வெளிப்படுத்துகையினை பெற்றுக்கொள்ளமுடிகின்றது. அடுத்து விருந்து வழங்கிக் கலத்தின் பிறப்புரிமைப் பதார்த்தத்துடன் இணைக்கும் வகையில் DNA உட்புகுத்தும் நுட்பங்களானவை பல்வேறு வகைப்படுகின்றது. இயற்கையில் சில பக்றீரியாக்கள் சுயமாகவே பிறDNA இனை உள்ளெடுக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இந்நிலையானது வெப்பம் அல்லது மின் அதிர்ச்சியினை வழங்குவதனூடாகத் தூண்டப்படலாம். இங்கு இவ்வாறான வெப்பம் அல்லது மின் அதிர்ச்சியினை வழங்குவதன் மூலமாக கலமென்சவ்வினது DNA இனை ஊடுபுகவிடும் தன்மையானது அதிகரிக்கப்படுகிறது. இங்கு உள்ளெடுக்கப்பட்ட DNA ஆனது குறித்த கலத்திலுள்ள பிறப்புரிமைப் பதார்த்தத்தினுடன் இணைந்துவிடலாம். அவ்வாறு இணையாத சந்தர்ப்பத்தில் அதில் மேலதிக நிறமூர்த்தத்திற்குரிய DNA ஆகக் காணப்படலாம். பொதுவாக விலங்குக் கலங்களுக்கான உட்செலுத்தலானது DNA இனை நுண்ணிய உட்புத்தல் (Micro Injection) முறைமூலமாக கருமென்சவ்வின் ஊடாக நேரடியாக கருவினுள் செலுத்தப்படலாம் அல்லது வைரஸ் காவிகளின் (Virus vectors) மூலமாகச் செலுத்தப்படலாம்.

தாவரக்கலங்களைப் பொறுத்தவரையில் Agrobacterium ஊடான மீளச்சேர்க்கையே மேற்கொள்ளப்படுகின்றது. இது இயற்கை முறையிலானதோர் பிறப்புரிமைப் பதார்த்த உட்புகுத்தல் முறையாகும். இவை தவிர DNA ஆனது பொன் (Gold) அல்லது தங்குதன் (tungsten) இனால் உறையிடப்பட்டு அந்நுண்ணிய DNA துகள்கள் துப்பாக்கி போன்ற உபகரணத்தினால் சுடுவதன் மூலமாக இளந் தாவர கலங்களினுள் செலுத்தப்படலாம்.

ஒரு தனிக்கலமானது பிறப்புரிமைப் பதார்த்த மீளச்சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மீள்உருவாக்கத்திற்கு உட்படுத்தப்படல் அவசியம். அதாவது பெருக்கமடையச் செய்யப்படல் வேண்டும். தாவரக்கலங்களைப் பொறுத்தவரையில் இம் மீள்உருவாக்கமானது இழையவளர்ப்புத் தொழிநுட்பத்தின் (Tissue culture) ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. விலங்குக்கலங்களை பொறுத்தவரையில் புகுத்தப்பட்ட DNA ஆனது முளையத்திற்குரிய தண்டுக்கலங்களில் காணப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். பக்றீரியாக்களானவை ஒரு கலத்தினால் ஆனதுடன் colonyகளினை உருவாக்குவதால் மீள்உருவாக்கம் அவசியமானதல்ல. இங்கு தெரிவிற்குரிய அடையாளப்படுத்திகள் (Selectible marker) பயன்படுத்துவதன் மூலம் மீள்சேர்க்கை அடைந்த கலங்களை மீள்ச்சேர்க்கை அடையாத கலங்களிலிருந்து இலகுவாக வேறுபடுத்தி அறியலாம். இத்தெரிவிற்குரிய அடையாளப்படுத்திகளானவை பொதுவாகப் பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைக்கப்பட்ட உயிரினங்களிற் காணப்படுகின்றன. ஆனாலும் இவை வேறுபட்ட சில நுட்பங்களின் ஊடாக நிறைவான வளர்ச்சியடைந்த பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைக்கப்பட்ட உயிரினங்களிலிருந்து அகற்றப்படலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பொலிமரேஸ் சங்கிலித்தாக்கங்கள் (PCR) தெற்கத்திய இனக்கலப்பு (Southern Hybridization) மற்றும் DNA தொடர்வரிசையாக்கல் (DNA sequencing) போன்ற நுட்பங்களினூடாகப் புதிய பரம்பரையலகு உட்புகுத்தப்பட்டதை உறுதிசெய்து கொள்ளலாம். இத்தகைய நுட்பங்களின் மூலமாக உட்புகுத்தப்பட்ட பரம்பரையலகின் நிறமூர்த்தத்திலான அமைவு (Chromosomal Location) மற்றும்

பிரதி எண்ணிக்கை (Copy Number) போன்ற விடயங்களையும் உறுதிசெய்வது சாத்தியமாகின்றது. ஒரு கலத்தில் புதிதாக உட்புகுத்தப்பட்ட பரம்பரையலகு காணப்படுவது உறுதிப்படுத்தப்பட்டதும் அப்பரம்பரையலகானது பொருத்தமான சந்தர்ப்பத்தில் பரம்பரையலகிற்குரிய வெளிப்படுத்துகை மேற்கொள்ளும் என்பது உறுதியாகக் கூறமுடியாது இதனால் பரம்பரையலகின் வெளிப்படுத்துகையினை அளவிடுவதற்கான அதாவது செயற்பாட்டு விளைவினை அளவிடுவதற்கான வடக்கிற்குரிய இனக்கலப்பு (Northern Hybridization) உண்மைநேர PCR (RT-PCR) மேற்கிற்குரிய ஒற்றுகை நுட்பம் (Western bloting), Immunofluorescence மற்றும் ELISA போன்ற நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**பிறப்புரிமைப் பொறியியலின் பிரயோகங்கள்.........**

பிறப்புரிமைப் பொறியியலானது மருத்துவம், ஆராய்ச்சி, கைத்தொழில், விவசாயம் போன்ற பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்தொழிநுட்பமானது பரந்துபட்ட அளவில் தாவரங்கள், விலங்குகள், நுண்ணுயிரினங்கள் போன்றவற்றில் பிரயோகிக்கப்படுகின்றது. உலகில் பக்றீரியாக்களிலேயே முதன்முதல் பிறப்புரிமைப் பொறியில் தொழிநுட்பம் பிரயோகிக்கப்பட்டது. இதன் மூலமாக மருந்துகள், சிலவகை உணவுசார் பொருட்கள் போன்றன உருவாக்கப்பட்டன. தாவரங்களானவை மீளச்சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டதன் மூலமாகப் பீடைப் பாதுகாப்பிற்குரிய இனங்கள், பூச்சி எதிர்பினங்கள், வைரஸ் எதிர்ப்பினங்கள், போசனை மேம்படுத்தப்பட்ட இனங்கள் சூழற்றகைப்பினைத் தாங்கவல்ல இனங்கள் போன்ற பல பயன்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

மருத்துவத்துறையில் பிறப்புரிமைப் பொறியியலின் பிரயோகங்களினை நோக்கும் போது மருத்துவப்பொருட்களின் உற்பத்தி, பரம்பரையலகு மருத்துவம் போன்றன முக்கியம் பெறுகின்றன. பிறப்புரிமைப் பொறியியலின் ஆரம்பகாலப் பயன்களைப் பார்க்கும் போது பக்றீரியாக்களின் உதவியுடனான பாரிய அளவிலான இன்சுலின் தயாரிப்பினைக் கூறலாம். இந்நுட்பமானது சமகாலத்தில் வளர்ச்சி ஓமோன்கள், புடகத்தூண்டி ஓமோன்கள், மனித அல்புமின், monoclonal பிறபொருட்கள், antihemophlic காரணிகள், தடுப்பூசிக்குரிய மருந்துகள் போன்ற பல முக்கியத்துவம் வாய்ந்தவை உருவாக்கப்படுகின்றது. மேலும் இந்நுட்பமானது புற்றுநோய்க்கு எதிரான மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகின்றது.

பிறப்புரிமை பொறியியலான மனித நோய்களுக்குரிய, விலங்கு மாதிரிகளை உருவாக்கி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் உதவுகின்றது. அந்தவகையில் பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைக்கப்பட்ட சுண்டெலியானது (GM mice) பொதுவாக அதிகளவில் பயன்படுத்தப்படும் ஓர் மாதிரி உயிரினம் ஆகும். இம்மாதிரியானது புற்றுநோய், பேருருவநிலை, இருதய நோய்கள், நீரிழிவு, வயதாதல், பிறப்புரிமைக் குறைபாட்டு நோய்கள் போன்றன தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகளில் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுவருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மிகஅண்மித்த ஆராய்ச்சிகளினை நோக்குகையில் பன்றி போன்ற பல விலங்குகளைப் பயன்படுத்தி மனித அங்கங்களை உருவாக்கும் முயற்சி தொடர்பான ஆராய்ச்சிகளும் விஞ்ஞானிகளால் அதிக முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

ஆராய்ச்சி தொடர்பான பிறப்புரிமை பொறியியலினை நோக்கும் போது இத்துறையானது பரம்பரையலகுகளின் தொழிற்பாடுகள் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளில் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. இதற்குப் பிறப்புரிமை மாற்றியமைக்கபட்ட பக்றீரியாக்கள் அதிகம் பிரயோகிக்கப்படுகின்றன. பக்றீரியாக்களைப் பொறுத்தவரையில் செலவு குறைந்ததாகவும், இலகுவாக வளர்க்கக்கூடியதாகவும், காலணிகளை உருவாக்கக்கூடியதாகவும், விரைவாகப் பெருக்கமடையக்கூடியதாகவும், இலகுவாகப் பரம்பரையலகு மாற்றங்களுக்கு உட்படுத்தக் கூடியதாகவும், மிகக்குறைந்த வெப்பநிலையிலும் உயிருடன் சேமிக்கப்படக் கூடியதாகவும் இருப்பதே இதற்குரிய காரணங்களாகும். இங்கு ஒருமுறை பரம்பரை அலகு மாற்றியமைக்கப்பட்டால் தொடர்ச்சியாகப் பல

ஆராய்ச்சிகளுக்கு அப்பக்றீரியாக்களைப் பயன்படுத்த முடியுமென்பது சிறப்பம்சம் ஆகும். இவ்வாறான தொழினுட்பங்களைப் பிரயோகிப்பதன் மூலம் பரம்பரையலகுகளின் தொழிற்பாட்டு இழப்புக்கள் தொடர்பாகவும், பெற்றுக் கொண்ட பரம்பரையலகுகளின் தொழிற்பாடுகள் தொடர்பாகவும், புரதங்கள் போன்றவற்றின் இடைத்தொடர்புகள் மற்றும் செயற்பாட்டு அமைவிடம் தொடர்பானவற்றை கண்காணிப்பதற்கும், பரம்பரையலகுகளின் வெளிப்படுத்துகை தொடர்பாகவும் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.


தொழிற்றுறையில் இப்பொறியியல் தொழினுட்பத்தின் பயன்களை நோக்கின் மருத்துவம்சார் உற்பத்திகள், உணவுசார் உற்பத்திகள், சூழல் நட்புநேய மின்கலங்கள், புளொர் ஒளிர்வுப் புரத உற்பத்திகள், உயிரியல் எரிபொருட்கள், நச்சுநீக்கிகள் போன்ற பல்வேறு உற்பத்திகள் காணப்படுகின்றன. இவ்வாறே விவசாயத்துறைசார் விடயங்களை எடுத்துநோக்கின் பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைக்கப்பட்ட தாவரங்கள் ஊடான பிறப்புரிமை ரீதியில் மாற்றியமைக்கப்பட்ட உணவுகள் தயாரிக்கப்படுகின்றன. மேலும் நோய் எதிர்ப்பினங்கள், பீடை எதிர்ப்பினங்கள், சூழல் தகைப்பு எதிர்ப்பினங்கள், தரமேம்படுத்தப்பட்ட உணவு உற்பத்திகள், மனிதனுக்கு பயனுள்ள சில மருந்துவகைகள் போன்ற பலவும் உற்பத்தியாக்கப்படுகின்றன.


இவ்வாறான பல்வேறுபட்ட துறைகளில் மிகவும் பயனுள்ள வகையில் உற்பத்திகளையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதற்கு வழிவகுக்கும் இத்துறைசார் அறிவானது அண்மைக்கால விஞ்ஞான வளர்ச்சியின் ஓர் விளைவே ஆகும். இருந்த போதும் பிறப்புரிமை மாற்றியமைப்பிற்கு எதிராகச் சில எதிர்ப்புக்களும் உருவாகியுள்ளமையும் மறுப்பதற்கில்லை. எம்மாணவர்கள் இது போன்ற மேம்பட்ட நுட்பமான விஞ்ஞானம்சார் விடயங்களினை தம் வாழ்நாளில் கற்றுத்தேர்ந்து எம்மக்களும் உலகமும் பயன்பெறும் வண்ணம் உழைக்க வேண்டுமென்ற பேரவாவுடன் இக்கட்டுரையை நிறைவாக்குகின்றேன்.


தொகுப்பு:
**திரு.ஆ.இளமாறன்.**
உயிரியல் ஆசிரியர்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
(தேசிய பாடசாலை).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனை வழிகாட்டல் பயிற்சியின் போது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# e-Learning கற்கைநெறியில் ஈடுபடும்போது



விடுதி மாணவர் உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடும்போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதி மாணவர்களின் அன்றாடச் செயற்பாடுகளிற் சில....


காலைப் பிரார்த்தனையில் ஈடுபடும்போது


காலை உணவருந்தும்போது


மாணவர்கள் கல்லூரி செல்லும்வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்விற்கு வித்திட்ட தாய்

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த என்னை இன்று கல்வியில் உயரவைத்து ஆசான் ஆக்கிய தாயே மு/மல்லாவி மத்திய கல்லூரி உயர்தரத்தில் சித்திபெற வைத்தவள் உத்தமமாய் தொழில் தந்த தாய் இன்று பார் போற்ற உயர்ந்து நிற்கின்றாள்.

இன்பம், துன்பம் உணர வைத்து வாழ்வில் ஏற்றம் தரவைத்தது மட்டுமல்லாது இன்று பல கல்விச்சமூகத்தை உருவாக்கி ஜாதி, மத பேதமின்றி பல கட்டமைப்பின் வளர்ச்சியில் செல்லும் எம் கல்லூரித்தாய் பெண் மாணவ விடுதியினைப் பெற்று இன்று ஆண் மாணவர் விடுதியினை பெறுகின்றது. இன்றும் பல நற்சமூகத்தை வளர்த்து உலகில் ஓங்கி நிற்கப்போகின்றது என்பதில் சந்தேகம் இல்லை. வேறுபாடசாலையில் இருந்து வந்த என்னை ஒரு பாடம் கற்கவென கேட்க வரவேற்றுக் கல்வி தந்தாய் உன் கலை அழகும், கல்லூரி கீதத்தின் நாதமும் வந்த அன்றே மனதில் நின்றது. கல்லூரி கட்டைகளில் எழுதிய பொன் மொழி கண்டு மனம் சிலிர்த்தது பாரபட்சம் இல்லாது சேவைக்கு வித்திட்டது.

தொண்டர் ஆசிரியராய் தொடர்ந்தேன் என் நன்றிக்கடனை ஆற்றுவதற்கு கல்வி தந்த உமக்கு கல்விச் சேவையை மனவுவந்து ஆற்றினேன். பலரின் இடர்களையும் வாழ்வில் தாங்கினேன். உனது ஆசியிலே எனக்கு ஆசிரியர் தொழிலே நிரந்தரமானது. மாகாணப்பாடசாலை சென்ற நான் மன வைராக்கியத்துடன் தேசிய பாடசாலையில் இணைந்தேன். கல்வி, ஆற்றல், நிர்வாகத்திறனை எனக்கு ஏற்றினாய் எனது சேவையில் பல சொல்ல முடியா துன்பங்களைச் சந்தித்தேன். பலரின் ஆறுதல் வார்த்தைகளால் சிந்தித்து நன்றிக்கடனாய் சேவை புரிகின்றேன்.

**திரு.கு.நிரோஜன்.**
(ஆசிரியர்),
மு/மல்லாவி மத்திய கல்லூரி.



***"கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்"***

***- அரிஸ்ராட்டில்-***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்கள் விடுதி பற்றி என் மனக் கண்களில் தோன்றிய பதிவுகள்

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்"

-கீதாசாரம்-

இவ்வாறுதான் எனது பார்வை காணப்பட்டது. நான் முதல் நியமனம் பெற்று மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நகரில் இருந்து சுமார்300km தொலைவில் உள்ள மு/மல்லாவி மத்திய கல்லூரியில் 10.09.2019 அன்று இணைந்து கொள்ள வருகை தந்த போது எனக்கு இப்பிரதேசம் தொடர்பான எந்தவிதமான தகவல்களும், அறிவும் பெற்று இருக்கவில்லை என்ற காரணத்தினால் நானும் எனது தாயாரும் வருகை தந்தோம். அவ்வேளை எங்களை இன்முகத்துடன் வரவேற்ற இப்பாடசாலை சமூகம் அதிபரையும் அறிமுகம் செய்தது.

அவ்வேளை அவருடன் பாடசாலை தொடர்பாகவும் ஏனைய விடயம் தொடர்பாகவும் நாங்கள் உரையாடிய போதும், தங்குமிடம் பற்றிக் கேட்ட போதும் அவர் இப்பாடசாலைக்கு இரண்டு விடுதிகள் உள்ளது எனவும் ஆசிரியர் விடுதி பற்றியும் கூறி எங்களை ஆண்கள் விடுதியில் தங்குமாறு கேட்டு கொண்டதற்கு இணங்க நாங்கள் அங்கு தங்கிக்கொண்டோம். 'மனிதனுள் மாணிக்கம் என்பார்கள்' அதனை நான் அதிபர் திரு.து.யேசுதானந்தர் அவர்களிடம் கண்டு கொண்டேன். அவரின் உபசரிப்பு இனிமையான பேச்சு, உரையாடிய விதம் அவரது திட்டமிடல் அனுபவப்பகிர்வுகள் என தன்னகத்தே பல்வேறு ஆளுமைப்பண்பைக் கொண்ட அவரை என் உள்ளம் கவர்ந்து கொண்டது.

இவரால் எனக்கு அறிமுகமான இவ்விடுதியில் நான் தங்கவரும் வரை எனது கல்லூரி விடுதி தொடர்பான பதிவே என் மனதில் ஊசலாடி கொண்டு இருந்து இருப்பினும் விடுதி பொறுப்பாளர் எங்களை அழைத்து செல்லும் போது தொலைவில் ஆண்கள் விடுதி ஓங்கி உயர்ந்து கம்பீரமாக காட்சி அழித்து கொண்டு இருந்தது அதனை அண்மித்து உள்ளே நுழைந்ததும் மனதில் பல்வேறு மாற்றம் தென்பட்டது. அழகிய வர்ணமான கட்டடங்கள், நவீன வசதி கொண்ட விடுதி அறைகள், துடிப்பான மாணவச் செல்வங்கள், பிரதான மண்டபங்கள், இயற்கை வனப்புடனான சுற்றுச்சூழல் எனப்பல்வேறுபட்ட திட்டமிடலுடனான அமைப்புக்கள் என் மனதைக் கொள்ளை கொண்ட வண்ணமாய் இருந்தது.

பின்பு இவ்விடுதி தொடர்பாகவும் தன்னமைவு, வளர்ச்சிப்போக்கு என்பன பற்றியும் அங்கு உள்ள விடுதி பொறுப்பளர் மற்றும் பணியாட்களிடமும் வினவிதகவல்களை அறிய முற்பட்ட வேளை இதனை ஒரு தனிமனிதரே அமைத்தார் எனவும் அவர் கடவுளின் மறுவடிவம் எனவும் கூறினார்கள் அவரை நான் காண வேண்டும், பேசவேண்டும். என்ற அவா இருந்து கொண்டே இருந்தது. அப்போது ஒருநாள் அவரை சந்திக்கநேர்ந்தது. அவர்தான் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் (லண்டன்) ஐயா அவர்கள். அவரை கண்டதும் அவரின் தோற்றம் இனிமையான பேச்சு, உபசரிப்பு தன்மை என்பன அவரை இன்னும் எனது மனதில் அன்பு கலந்த உயரிய மரியாதையைக் கொடுக்கச்செய்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொடுத்தார்க்கு ஒரு போதும் குறைவில்லை' என்பதை போல அவர் இம்மாணவர்களை எதிர்கால தலைவராக மாற்றும் எண்ணமும் இச்சமூகத்தை சிறந்ததொரு சமூகமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணமும் உயர்ந்த மேலான சிந்தனையாக காணப்பட்டது என்பது வரவேற்கத்தக்க விடயமே. அதுமட்டுமல்லாது அங்குள்ள மாணவர்க்கு உணவு வழங்கும் படிமுறைகள், காலை தேனீருக்காக கோமாதா இல்லம் அமைத்து இயற்கை பசும்பால் வழங்கும் முறைமை பயிர்ச் செய்கைகள் மற்றும் பயன்தரு மரங்கள் வளர்ப்பு என கல்லூரி விடுதி வளாகத்தை அலங்கரித்து கொண்டு இருப்பதுடன் பல்வேறு தரப்பினர்க்குத் தொழில் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து ஒரு சமூகத்தை மாற்றி அமைத்த பெருமை வைத்திய கலாநிதி அவர்களையே சாரும்.

இவரின் கொடைத்தன்மை தூரநோக்குச் சிந்தனை என்பவற்றிற்கு செயல்வடிவம் கொடுத்து அதனை மேற்பார்வை செய்யும் திறமை கல்லூரியின் அதிபரையே சாரும். இவ்வாறு பல்வேறு அனுபவங்களை பெற்றுத்தரும் வகையில் இப்பாடசாலை விடுதிகள் இரண்டும் காணப்பட்டது. மேலும் இவ்விடுதிகளில் பயிலும் மாணவர்கள் எதிர்காலத்தில் சமூகத்தில் உயர்ந்த இடத்திற்கு செல்லவும் அவர்கள் எந்தச் சூழலையும் எதிர்கொண்டு வெற்றி பெறவும் உயர்பதவிகள் பெற்று இவ்விடுதிக்கும் அவர்களது சமூகத்திற்கும் பயனுடையவர்களாக மாற்றம் பெறவும், இறைவனை வேண்டி என்னால் இயன்ற சகல உதவிகளையும் இவ் இரண்டு விடுதிக்கும் முழு மூச்சுடன் வழங்குவேன் எனவும் ஒரு சிறப்பான இயற்கை வனப்புடனான இடம் கிடைத்ததும் இவ்வாறான சூழலில் முதல் நியமனம் பெறக்கிடைத்ததும் எனக்கு ஒரு வரப்பிரசாதமே.

மேலும் விடுதி மாணவர்க்கு மட்டுமன்றி பாடசாலை சமூகத்திற்கும் அன்றும் இன்றும் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்து கொண்டு நன்கொடைகளை வாரி வழங்கும் வள்ளலாக திகழ்ந்து கொண்டிருக்கும் வைத்திய கலாநிதி அவர்களின் சேவை வளர்ச்சி பெறவும் இவரின் ஆயுளும் ஆரோக்கியமும் அதிகரிக்கவும் இறைவனை வேண்டி இவ்வாறான தூரநோக்கு கொண்ட கல்விமான்கள், படைப்பாளிகள், கொடைவள்ளல்கள், புத்திஜீவிகள் எனப்பல்வேறு தரப்பினருடன் செயலாற்ற கிடைத்தமை இட்டு அகமகிழ்வு அடைகின்றேன்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

-திருக்குறள்-

நன்றி

**திரு.ப.சண்முகப்பிரியன்.**
ஆசிரியர்,,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
தேசிய பாடசாலை,
யோகபுரம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிடுக்குடன் மிளிரும் விடுதிகள்.

1962 ஆம் ஆண்டு அரசினால் பொறுப்பேற்கப்பட்ட மல்லாவி மத்திய கல்லூரியானது காலத்திற்குக்காலம் வளர்ச்சி பெற்று வருகின்றது. அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மல்லாவி மகா வித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி, தேசிய பாடசாலை எனப்பல படிகளைக் கடந்து பெரும் விருட்சமாக மல்லாவியை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றது, இப்பாடசாலையில் பல அதிபர்கள் கடமையாற்றி உள்ளனர். ஒவ்வொரு அதிபர்களினதும் செயற்றிறன்கள் போற்றுதற்குரியது. முல்லை மாவட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பாடசாலைகளில் மல்லாவி மத்திய கல்லூரியும் இடம் பெறுவது பழைய மாணவர்களாகிய எங்களுக்கும் பெருமையே.

பாடசாலை அபிவிருத்தியுடன் இணைந்ததாக மாணவிகள் விடுதி, ஆண் மாணவர் விடுதி, பண்ணை என்பவற்றின் அபரீதமான வளர்ச்சியை நாம் கண்ணாரக் காண்கின்றோம். கல்விக்காக ஏங்கித்தவிக்கும் கிராமப்புற மாணவர்களுக்கு ஒளியூட்டும் இச் செயற்பாடுகளை பாராட்டாமல் இருந்துவிட முடியாது. முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதிகளுடனான ஓர் பாடசாலையாக மிளிர்ந்து நிற்கும் பாடசாலை **"முயன்றால் எதையும் சாதிக்கலாம்"** என்பதைக் காட்டி நிற்கின்றது.

**"உன்னால் முடியும் வரை முயல்வது அல்ல நீ நினைத்த செயல் முடியும் வரை முயல வேண்டும்"** என்ற அப்துல்கலாமின் நன்மொழிக்கு உருவம் கொடுத்தது போல மல்லாவி மத்திய கல்லூரியின் அதிபரும் தான் நினைத்த செயலுக்கு முடியும் வரை முயன்றதன் பயனாகவும், தூர சிந்தனையின் பயனாகவும் விடுதிகள் நிமிர்ந்தன எனச் சொன்னால் சாலப் பொருத்தமே.

ஒரு செயலை எண்ணுவது இலகு. அதை செயல் வடிவத்தில் கொண்டு வருவது கடினம். மாணவர்களின் விடுதிகளும் அவ்வாறே. விடுதி என மூன்றெழுத்துக்களில் சொல்லி விடலாம். அதை அமைத்து நிர்வகிப்பது என்பது பெரும் அசுர முயற்சியாகவே கருதுகின்றேன். இம்முயற்சியை எடுத்த எமது அதிபர் திரு.து.யேசுதானந்தர் போற்றுதற்குரியவர்.

**"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்,**
**பின்னருள்ள கருமங்கள் யாவும்**
**பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,**
**அன்ன யாவிலும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"** என்னும் புனிதமான பணிக்கு வலுச்சேர்த்தவர் அதிபர் எனலாம்.

மல்லாவி மத்திய கல்லூரியின் விடுதிகள் ஒவ்வொன்றுக்கும் தனித்துவம் உண்டு. அமைப்பு ரீதியாகப் பார்த்தால் அவை புரியும். நவீன வசதிகள் கொண்ட கட்டடங்கள் மாணவர்களுக்கு மகிழ்வூட்டுவனவாக அமையும் என்பதில் ஐயமில்லை, புத்தகச்சுமையுடன் வீட்டுச்சுமைகளையும் சுமந்து வரும் மாணவர்களுக்கு மனோரம்மியமான ஒரு சூழலை விடுதி கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதே.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடுதி வளாகங்களை வளமான ஒரு இடமாக மாற்றி **"வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் வீணாக்க மாட்டேன்"** என்ற பராக்கிரமபாகு மன்னனைப்போல ஒரு துண்டு நிலத்தையும் வீணாக்காது. நிரந்தரப் பயிரான தென்னை, மா, மரமுந்திரிகை என்பவற்றோடு எலுமிச்சை, தோடை, வாழை என பல பழமரப்பயிர்களுடன் மரக்கறித் தோட்டமும் விடுதியின் எழிலுக்கு எழில் சேர்க்கின்றது. அத்தோடு மாட்டுப்பண்ணையும், கோழிப்பண்ணையும் விடுதியின் சூழலில் காணப்படுவது ஒரு தன்னிறைவான பொருளாதாரத்தை கட்டிக்காக்கும் முயற்சியாகவே கருதுகின்றேன்.

இந்த வளர்ச்சிக்கு மூல காரணமானவரும் மூலதனம் ஈந்தவருமான வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் மற்றும் வித்தியா ஜெயரட்ணம் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

**"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்"** - (குறள்-517)

என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப இவர்களது பணிகள் அமைந்திருக்கின்றன. எமது பிரதேச மாணவர்களும் ஏனைய பிரதேச மாணவர்களும் பயன்பெறத்தக்கவகையில் கல்விப்பணியாற்றிவரும் கல்லூரியும், கல்லரியின் விடுதிகளும் தொடர்ந்து தம்பணியிற் சிறக்கவும் விடுதிகளில் பங்குதாரர்களாகி இங்கு சேவையாற்றும் சேவையாளர்கள் சகலநலன் பெறவும் வேண்டுகிறேன்.

**திருமதி றுஜினா இலட்சுமணநாதன்.**
முகாமைத்துவ உதவியாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்..



***"எதிரிகள் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்தவன்,***
***முழுமையாக வாழவில்லையே என்றே அர்த்தம்"***
***- சேகுவேரா-***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலின் விருட்சம்

கல்வி என்றிடும் கரையிலா பெருங்கடலை
நீந்திக்கடக்கவே வாய்ப்புக்கள் தேடிடும்
மாணவர் சமூகத்திற்கு முதுபெரும் வைத்தியர் ஒருவர்
முத்தான வைத்தியம் பார்த்தார்

நாற்றிசையும் கல்விக்கு ஏங்கிடும் மாணவர்க்காக
வைத்தியம் பார்த்தார்
விமல் ஜெயரட்ணம் என்றிடும் பெருவிட்சம் விழுதுகள் பரப்பி
புலம்பெயர் நாட்டினில் வாழ்ந்த போது அருங்கொடையின்
வித்தொன்றை மல்லாவி மண்ணிலே விதைத்திட்டாப் பெருமை

திட்டமிடலின் தியாகியாய் சிறீஸ்கந்தராஜா இணைந்திட
பெருமைமிகு நிர்வாகியாய் யேசுதானந்தரும் மனவுவர்ந்து ஏற்றிட
விடுதி எனும் வித்து விருட்சமாய் ஆனதே
கடலும் வயலும் சேர்ந்த குளங்களும் ஆறுகளும் நிறைந்த
பண்பாடும் கலைகளும் பரப்பிய
முல்லை மாவட்டத்தின் மேற்கினிலே உயர்ந்தாங்கு ஓங்கி நிற்கும்
மல்லாவி மத்திய கல்லூரி
அன்னையின் பிள்ளைகளாக அரவணைத்து நிற்க்கின்றது.
விடுதியின் விழுதுகளை
காப்பாளர் காத்து நிற்க ஊழியர்கள் தியாகம் செய்ய
உண்ணதமாய் ஓங்கிநிற்கும்
கல்வியின் உரிமையின் குறலாய் விடுதிகள் இயங்கிடும்
நவநாகரீகம் என்னும் போர்வையில் மாணவர் மத்தியில்
புகுந்துவிட்ட
கலாசார சீரலிவை புறந்தள்ளிவாழும் மாணவர்கள் புண்ணியரே
அதிபரும் ஆசிரியர்களும்
அன்பர்களும் நண்பர்களுமாய்
நோக்கிக் காத்திடும் கல்வி நோய்க்கு மருந்தே
விதை செடியாகி செடி மறமாகி
பச்சைப் பசேளன பசாங்கருணை பூண்டிருக்கும்
வரலாற்றின் பதிவாய் வந்திட்ட விடுதிகள்
கலங்கம் இன்றி கவலை இன்றி
வாழ்க்கையின் படிகலைக் கற்றிட வந்தே
வரப்பிரசாதமே கல்லூரியின் விடுதிகள்
மாபெறும் கொடையாளனின்
மானிக்க தீபமாய் மங்கான ஒளிவீச
மனதார வாழ்த்திடுவோம்
கல்வி எனும் கலங்கரை விளக்காய்
மானிடவியலின் மகத்தான தேடலாய்
மல்லாவி மண்பெற்ற இணையிலா வழச்செல்லமாய்
என்றென்றும் நீடூழி நிலைத்துநின்று வாழ்கவே!
வாழ்த்திடும் நான்

**திருமதி.வி.பிரகலாதன்**
ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr விமல் ஜெயரட்ணம் & திரு காசிநாதர் குடும்பத்தினர் விடுதி மாணவர்களுடன்



மாணவிகள் விடுதி வளர்ச்சி தொடர்பாக - Dr விமல் ஜெயரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதியில் பயன்தரு மரநடுகையின் போது











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

குடும்பங்களின் சொத்தான சிறுவர்களைப் பெற்றோரும் மற்றோரும் அன்பாகவும் பண்பாகவும் நடத்தல்அவசியம். மனதைக் கவருபவர்கள் சிறுவர்கள். சிறுவர் சமுதாயம் சிறப்பாக அமையின் நமது எதிர்கால சமூகம் மேம்படும். எனவே சிறுவர்கள் நற்பண்புடையவராகவும் நல்லியல்பு உடையவர்களாகவும் வளர்க்கப்பட வேண்டியது அவசியம்.

இன்று எமது சிறார்கள் பல்வித பிரச்சினைகளுக்கு ஆளாகி வருவதால்தான் சிறுவர் தினமென்று ஒருநாளில் அவர்களின் நலத்தைப் பேண மக்கள் அனைவரும் விழித்தெழுப்ப செய்கின்றனர். இன்றைய சிறுவர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பெற்றோர் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர். பாடசாலைகளும் சமயநிறுவனங்களும் வேறுபல வெளிநாட்டு நிறுவனங்களும் சிறுவர் நலன் காப்பதில் பங்கேற்கின்றனர்.

அண்மையில் இங்கையில் யுனிசெப் நிறுவனத்தின்உதவியுடன் ஜனாதிபதி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிறுவர்களுக்கான தேசிய திட்டத்தில் சிறுவரின் கல்வி சுகாதாரம் விளையாட்டு குடும்பச் சூழல் போன்ற பல விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டு அதற்கான வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்று நாடளாவிய ரீதியில் சிறார்களின் முன்னேற்றத்திற்கு இவை ஊன்றுகோலாக அமைகின்றது.

இவ்வாறு பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் சிறார்களுக்கு நற்பழக்கவழக்கங்களை எடுத்துகாட்டுகின்றனர். தலைமைத்துவப் பண்புகளையும் சமூகவிழுமியங்களையும் மன்றங்கள் மூலம் விளங்குகின்றனர். பாடசாலைச் செயற்பாடுகளில் நிகழ்வுகளுக்கான ஒழுங்குகள் செய்தல், அழைப்புவிடுதல், ஆசிரியரின் ஒத்துழைப்பைப் பெறுதல் போன்ற விடயங்களினை மாணவர்களைப் பெறச் செய்து வழிப்படுத்துகின்றார்கள். மாணவதலைவர்கள், சாரணியம் போன்றவற்றின் ஊடாக குறிப்பாக எப்போதும் தயாராக இருந்து பிறருக்கு உதவிசெய்தலையும், பண்பாக நடத்தலையும், உண்மை பேசுதலையும், இறைசிந்தனையையும் சிறார்கள் மத்தியில் வளர்க்கின்றார்கள். இன்றைய சிறார்களின் நலனில் பாடசாலைகளைப் போன்றே சமய நிறுவனங்களும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். பாடத்திட்டத்திலே காண்பது போல இந்து வழிபாட்டிடங்களுக்கு மாணவர்கள் ஆசிரியருடன் சென்று வழிபாடுகளில் ஈடுபடுதல் அவசியமாகும். இந்துசமய வழிமுறைகளுடன் ஏனைய சமய வழிபாடுகளையும் அறியச்செய்வதுடன் மதங்களை மதிக்கும் பண்புகளை வளர்க்க சிறார்கள் பாடுபட வேண்டும்.

சமயம்சார் மன்றங்கள் விடுமுறைநாட்களில் சமய வகுப்புக்களை நடாத்துகின்றனர் பல்வேறு விழாக்களைக் கொண்டாடுகின்றனர். ஒழுங்கான ஆடைகளை அணிய பழகுகின்றனர். பெரியோரை மதிக்கவும், பேணவும் அறிவுறுத்துகின்றனர். நூல்களை வாசிக்கவும் நல்ல கருத்துக்களையும், பாடல்களையும், தோத்திரங்களையும் மனனம் செய்யவும் தூண்டுகின்றனர். போட்டியில் பங்குக்கொள்ளச் செய்கின்றனர். தாமே போதனைகளைச் செய்யவும் தூண்டுகின்றனர்.

இவ்வாறாக இன்றைய சிறார்க்ளின் நலன்களில் அக்கறை கொண்ட பெற்றோர்களும் பாடசாலை மற்றும் சமய நிறுவனங்களும் நற்பழக்கவழக்கங்களைப் புகழ்வதுடன் சமூக விழுமியப்பண்புகளையும் தலைமைத்துவப்பண்புகளையும் எதிர் காலச் சமூகம் சிறப்புற வாழ்த்துகின்றன.

**செல்வன்.செ.யோதிகன்**
தரம் :- 11
ஆண் மாணவர் விடுதி,
மு/மல்லாவி மத்திய கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதி வாழ்க்கை

மு/மல்லாவி மத்திய மத்திய கல்லூரி மாணவிகள் விடுதியின் மாணவி என்ற வகையில் விடுதி பற்றிய சிறு அனுபவம் நான் தரம் ஆறிலே விடுதியிலே சேர்ந்தேன் இன்று அனைவருக்கும் விடுதியென்றால் மாடிக்கட்டடங்களும் பூந்தோட்டமும் தான் தென்படும். ஆனால் விடுதியின் ஆரம்பத்தில் இருந்தது ஒரு சிறிய கட்டடமும் பண்படுத்தப்படாத நிலங்களுமே. நான் இங்கு வரும் போது அருட்சகோதரி கௌசலா, அருட்சகோதரி சிறிய புஸ்பம் ஆகியோர் விடுதி பாதுகாப்பாளர்களாக இருந்தனர் சிறு வயது தானே அதி கூடிய ஆர்வம் காலையிலே நான்கு மணிக்கு படிப்பறைக்கு வந்தால் மேசையின் மீதே நித்திரை கொள்வேன். விடுதிக்கு நான் புதிது தானே கண்டிப்பது குறைவு நாட்கள் செல்ல செல்ல பழகிவிடுமென விட்டு விட்டார்கள். இற்றைக்கு நான் விடுதிக்கு வந்து பல வருடங்களாகிறது ஆனால் இப்பொழுதும் நான்கு மணிக்கு நானாக எழும்ப மாட்டேன்.

எமது கைகளினாலேயே நிலத்தை பண்படுத்தி பூங்கன்றுகள் வைத்தோம். அது இன்று பூந்தோட்டமாகவே மாறிவிட்டது. அதிகாலையில் நித்திரையிலிருந்து எழும்பும் போதே நீர் ஊற்றும் குழாயை யார் முதலில் எடுப்பது என்று ஒழுங்கு முறையை கூறிவிடுவோம். அருட்சகோதரி சிறிய புஸ்பம் பிரதி அதிபராக இருந்தமையினால் இரவில் மட்டுமே எங்களுடன் இருப்பார். ஆனால் அருட்சகோதரி கௌசல்யா எங்களுடன் அனைத்து நேரங்களிலும் இருப்பார். விடுதியில் பெருமளவு மாணவர்கள் இந்து மாணவர்கள் எனினும் எந்தவித மத வேறுபாடுகளுமன்றி எம்மை தமது வெளிநாட்டு உறவினர்களிடம் உதவி பெற்றும், தமது சொந்த நிதியிலேயும் எமக்கு கணிதம், தமிழ், வரலாறு, விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான மேலதிக வகுப்பை ஒழுங்குபடுத்தினார். நிதி வசதி போதாமையினால் தாமே எமக்கான ஆங்கில கல்வியை கற்றுத் தந்தார். விடுதி ஆரம்பித்தது முதல் இன்று வரை கணித பாடத்தை கற்பிப்பது பிரதீபன் ஆசிரியரே. அவரிடமே நானும் தரம் 06 இலிருந்து தரம் 11 வரை கற்றேன். அவரிடம் கற்கும் போது எனக்கிருந்த ஒரே சிக்கல் காலையில் 5.30 ற்கு எழும்ப வேண்டிய நாங்கள் 4.30ற்கு எழும்ப வேண்டிய கட்டாயம் வந்தது. வகுப்புக்கு செல்லும் போதெல்லாம் கஸ்ரப்பட்டு நித்திரையிலிருந்து எழும்பிச் செல்வேன். ஆனால் அவரால் தான் க.பொ.த சாதாரண தரத்தில் நானும் என் நண்பிகளும், சகோதரிகளும் கணித பாடத்தில் சித்தியடைந்தோம்.

வரலாறு பாடத்தை நிக்சன் ஆசிரியர் கற்பித்தார். வகுப்பில் எனக்கும் அவருக்கும் எப்பொழுதுமே வாக்கு வாதம் தான் வரும் ஆனால் மிகவும் அழகாக வரலாறு பாடத்தை கற்பிப்பார். வரலாறு என்றாலே அனேக மாணவர்களுக்கு பிடிக்காது. ஆனால் விடுதி மாணவிகளுக்கு நிக்சன் ஆசிரியரை பிடிக்கும் என்பதால் வரலாறு பாடத்தை நன்றாக படித்து க.பொ.த சாதாரண தரத்தில் சிந்தியடைந்தார்கள். ஐப்பசி மாதம் ஒன்பதாம் திகதியாம். எமது பாடசாலையைப் பார்க்க வந்த ஒருவரை அருகிலே விடுதியுள்ளது என்று கூறி அழைத்து வந்து விட்டார். அன்றுதான் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களை அழைத்து வந்தார். வைத்திய கலாநிதி அவர்கள் விடுதியின் ரம்மியமான சூழலினாலும் விடுதி மாணவிகளின் கதைகளாலும் கவரப்பட்டு எமது விடுதிக்கு உதவ முன்வந்தார். அதன் முதற்கட்டமாக எமக்கான 02 மாடிக் கட்டடத்தை அமைக்க முடிவு செய்தார். அதன் பின் இவ் விடுதி அவரது சொந்த நிதியின் கீழ் தனது குடும்பத்தாரை கவனிப்பது போல் எம்மைக் கவனித்து வருகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருமுறை வரும் போதும் எமக்கு எவ்வளவோ பெரிய உதவிகளை எல்லாம் செய்து விட்டு எதுவுமே செய்யாதவர் போல் உங்களுக்க என்ன வேண்டும் என்று கேட்பார். அவருக்கு எம்மிடம் நன்றாகக் கதைக்க வேண்டும் என்று ஆசை நீண்ட நாட்களாக உள்ளது. இப்பொழுது ஆண்கள் விடுதியையும் அமைத்து தந்துள்ளார். எமது குடும்பத்தை பிரிந்து விடுதியில் வாழ்வது மிகவும் கஸ்ரமான ஒரு விடயமாகும். ஆனால் விடுதியில் எத்தனையோ விதமான மாணவிகளுடன் பழகும் சந்தர்ப்பம் எமக்கு கிடைத்துள்ளது. இன்னம் ஓரிரண்டு வருடங்களின் பின் ஆண் வடுதியில் உள்ள சகோதரர்களும் இவ்வாறான அனுபவத்தை பெற்றுக்கொள்வர். இதற்கு அத்திவாரமிட்டவர் விமல் ஜெயரட்ணம் அவர்களே.

இந்தக் காலத்தில் இப்படி ஒரு மனிதர் இருப்பது அபூர்வம் உயிருடன் இருக்கும் போதே சிலை வைக்கப்பட வேண்டிய மாமனிதர்.

**செல்வி.கானுஷா நேசநாதன்**
விஞ்ஞானபிரிவு-2021
மாணவிகள் விடுதி,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
(தேசிய பாடசாலை)



*"உன் பிள்ளை ஊமையாய் பிறந்தால்*
*சொத்து சேர்த்துவை*
*சொத்து சேர்த்து வைத்து ப*
*ிள்ளையை ஊமையாக்காதே"*
*- காமராஜர்-*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதி அனுபவம்

முக்கனி சாறெடுத்து
முத்தமிழ் தேனெடுத்து
உன்தாழ் பணிகிறோம் - நல்
உறவுடன் காத்திடுவாய்

வாட்டமுள்ள முகத்துடன்
அம்மாவின் கரம் பிடித்து
பதற்றத்துடன் கால் பதித்தோம்
இவ்விடுதி மண்தனிலே

விடுதி என்றாலே - எம்மனதில்
பயக்கெடுதி உணர்வுதான்
பயத்தைப் பயனாக மாற்றியது
இவ்விடுதி விதிமுறைகள்

விடுமுறை என்றாலே பிடிக்காத
வார்த்தையில் ஒன்று - தான்
அதை பிடிக்க வைத்தது - எம்
காப்பாளர்களின் அன்பான கவனிப்பு

அப்படி இருந்தும் சார்ச்சஸ் - பெல்
அடித்தால் ஒழித்து ஒழித்து - திரிந்து
மிஸ்சிடம் பேச்சுக்கள்
வாங்கிய நாட்கள்

பாட்டுக்கள் கூச்சல்கள் - என
நாம் செய்யும் அட்டகாசங்கள்
காப்பாளர்கள் இது பெண்கள் விடுதியா - என
வியக்கும் அளவுக்கு இருந்திட்ட நாட்கள்

எம் சகோதரர்களுக்காக அமைக்கப்பட்டதாம்
அந்த ஆண்கள் விடுதி - அதை
சிறப்புடன் அமைத்து தந்தது எங்கள் வைத்தியராம்
அவர் சீரும் சிறப்புடனும் வாழ மனதார வாழ்த்துகிறோம்.

சாதனைகள் பல செய்திட வந்திருக்கும் - எம்
சகோதரர்களின் விடுதி
மென்மேலும் வளர்ச்சி அடைய
வாழ்த்துகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு விடுதிகளிலும் மாணவர்கள் செய்யும் குறும்புகளே ஏராளம்
விடுதிவிட்டுச் செல்கையிலே வந்திடுமே பேரெல்லாம்
விடுதி மாணவியா எனப் பலர் வியந்துரைக்க
விருப்புடனே நானுரைப்பேன் ஆமென...!

விடுதிக்கு மேலதிக வகுப்பிற்கு என உள்நுழைந்து
எமமனதில் இடம்பிடித்து எம் உறவுகளாகவே
மாறிய எம் ஆசான்களையும் அவர்கூறிய
அறிவுரைகள்தான் வாழ்வில் மறக்கமுடியுமா?

நாம் மாறலாம் நம் நட்பு மாறலாம்
பந்தம் மாறலாம் நம் பாசம் மாறலாம்
ஆனால் இந்த விடுதி நினைவுகள்
என்றென்றும் எம்மனதில் பூத்த மலர்களாய்

இந்த விடுதியை விட்டுச்சென்றாலும் - இவ்விடுதியின்
நாட்கள் ஒவ்வொன்றும் என்றும் நீங்கா நினைவுகள்
இவ்விடுதி மேலும் ஆல்போல் தழைத்து
அறுகுபோல் வேரூன்றி உறுதியாக வளர
ஆண்டவனை வேண்டுகின்றேன்.

**செல்வி நிஷா கந்தலிங்கம்**
தரம் 11
மாணவிகள் விடுதி,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
(தேசிய பாடசாலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கள் பெருகட்டும் வளர்ச்சி மலரட்டும்

மு/மல்லாவி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை தனது அறுபதாண்டு கால வரலாற்றில் புரிந்த சாதனைகளோ பற்பல. அவற்றிலே உற்பத்தி திறன் போட்டியில் தேசிய ரீதியில் இடம்பிடித்து எமது பிரதேசத்திற்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தமை யாவரும் அறிந்ததே. பாடசாலையின் பௌதீகவளங்களை அபிவிருத்தி செய்வதில் அதிபர் திரு து.யேசுதானந்தர் அவர்களின் அயராத பெருமுயற்சி பாராட்டுதற்குரியது. அந்தவகையில் இப்பாடசாலையிலே பெண்மாணவர்களுக்கான விடுதியும் அதனைத்தொடர்ந்து ஆண்மாணவர்களுக்கான விடுதியும் அமைக்கப்பெற்றுள்ளது. ஆண் மாணவர்களுக்கான விடுதி திறப்பு விழாவின் போது வெளிவரவிருக்கும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பல உயிர்களை, உடைமைகளை இழந்த நிலையில் போக்குவரத்து, பொருளாதாரம் வளமற்ற நிலையிலே வாழ்ந்துகொண்டிருக்கையில் கல்வியை இழக்ககூடாது என்ற நல்ல நோக்கிலே இவ்விடுதிகள் அமைக்கப்பட்டமையானது கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை நல்குகிறது. குறிப்பாக இவ்விடுதிகளை அமைப்பதற்கு நிதியுதவிகளை வழங்கிக்கொண்டிருக்கும் வைத்திய கலாநிதி உயர்திரு விமல் ஜெயரத்தினம் அவர்களின் நல்ல சிந்தனையைக் கொடையை எமது பிரதேசமக்கள் நன்றியுடன் நோக்குகிறார்கள்.அத்துடன் தொடர்ந்தும் விடுதியைப்பராமரித்துப் பயன்பெற வைக்கின்ற பணி சிறப்பாக நடைபெற வழிப்படுத்தி நெறிப்படுத்தும் அதிபர் திரு துரைராஜா யேசுதானந்தன் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் கல்வி வலயத்தில் தனக்கென ஒரு தனியிடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டிருக்கும் இப்பாடசாலை மேலும் பல சாதனைகள் படைத்து அகில இலங்கை ரீதியிலே சிறந்த பாடசாலையாக மிளிர வாழ்த்துவதோடு இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், விடுதியின் பணியாளர்கள், அபிவிருத்திச்சங்கத்தினர், பழையமாணவர் சங்கத்தினர், பிரதேசமக்கள், நலன்விரும்பிகள், கொடைவள்ளல்கள், வெளிநாட்டில் வதியும் உதவிக்கரம் நீட்டும் மக்கள், மலர்க்குழுவினர், இப்பாடசாலைக்கு ஆற்றிவரும் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வெகுவாகப்பாராட்டுகின்றேன். அத்துடன் இவ்விழா சிறப்புறவும் விழா மலர் வெளியீடு சிறப்புறவும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.சண்முகநாதன்.**

ஓய்வுநிலை நிர்வாக கிராம அலுவலர்,
அணிஞ்சியன்குளம்,
யோகபுரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவொளி

## ஸ்ரூடியோ & வீடியோ

- தேசிய அடையாள அட்டை படப்பிடிப்பிற்கான அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
- படப்பிடிப்புத் துறையில் நீண்ட கால அனுபவம்
- சிறிய சாதாரண அல்பங்கள் தொடக்கம் கரிஸ்மா, சிந்தெட்டிக் அல்பங்கள் வரை தங்கள் வசதிக்கேற்ப பெற்றுக்கொள்ளும் வசதி.

பிரதான வீதி, மல்லாவி. T.P: 0779596050

# பிள்ளையார் ஸ்ரோர்ஸ்



பலசரக்குப் பொருட்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள்
என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

பிரதான சாலை, மல்லாவி T.P: 0774297025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவெள்ளி

கஷ்டம் எமை வாட்ட காலம் எமைத் துரத்த
கல்வி பெற்று என் பிள்ளை வளர - கண்ட

கனவுகள் கரைந்து கண்ணீரும் தானாக
விரைந்த நடைகள் தளர்ந்து தள்ளாட

வைத்த புள்ளியில் சில காணாமல் போய்விட ஏக்கம்
என்னை ஏளனமாய் தான் பார்க்க - ஏனெனில்

நாம் இருவருமே மாற்றுத்திறனாளிகள் ஆனாலும் - மனம்
ஓயவில்லை மறுபடி நினைவுகள் மேலெழ

மல்லாவி மத்தியில் என்மனம் நிறுத்தற் குறியோடு
மாணவிகள் விடுதியினை ஆர்வமாய் நோக்கி

இராஜ் அகம் சென்று என்மகளை சேர்த்து விட
அனுமதி பெற்ற போது அன்று மொரு

பிரசவத்தின் வலிகுறைந்த தாயின் உணர்வெனக்கு
வென்றுவிட்ட சிறு களிப்பில் - வெற்றிடங்கள் நிரம்பி விட

என்பிள்ளை கல்விதனை நிலை கொள்ளச் செய்த
அந்த மாணவியர் விடுதி போல் மாணவர்கள்

விடுதி யொன்று மலர்வதிலே மனம் மகிழ்ந்தே
மறுபடியும் மறுபடியும் நன்றியினைச் சொரிகின்றேன்

தள்ளுண்ட மனிதரையும் துன்பத்தில் அள்ளுண்டு
போகாது கைதந்து உதவ வெனக் கடவுள்

தான் தந்த காப்பகமாய் அகம்போல் புதிதாய்
பூத்தவனே பொதிகைத் தென்றலாய் புதுமை படைத்திட

-பூத்தூவி வாழ்த்துகிறேன்-

**திருமதி யசோதா செந்தில்ராசன்.**
விடுதி மாணவியின் பெற்றோர்,
கொல்லவிளாங்குளம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்கள் விடுதியில் முதற்பாதம்

நான் இவ் ஆண்கள் விடுதியில் முதலாம் மாதம் முதலாம் திகதி காலடியை எடுத்துவைத்தேன். இங்கே வரும் ஆண்கள் விடுதி மாணவர்கள் இன்முகத்துடன் வரவேற்றனர். பின்னர் அதிபர் அவர்கள் இல்லத்தின் வரலாறுகள் பல கூறி வரவேற்றார். எனக்கு இவ் ஆண்கள் விடுதிக்கு வருகையில் அதன் வெளிப்பக்கப்பார்வையைப் பார்த்த போது இந்த இயற்கை வனப்பு மிக்க ஆண்கள் விடுதியில் எனக்கு விடுதிக்காப்பாளர் பதவி கிடைத்ததை இட்டு இறைவனுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். மேலும் இவ் ஆமை வடிவில் அமைந்த கட்டடத்தை கட்டி ஆண் மாணவர்களுக்காக கையளித்த ஐயாவைப் பற்றி பல மாணவர்கள் கூறியபோது எனக்கு அவரைப் பார்க்க வேண்டும் என்ற அவா என் மனதில் இருந்தது. ஒரு நாள் அவரைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தபோது, அவர் என்னைப்பற்றி முழுவதும் சொல்கிறார். அவ்வாறு நேரடிக் கண்காணிப்பில் உள்ள இவரை காணக்கிடைத்தது என்வாழ்வில் பெற்ற பேறு! இங்கே உள்ள மாணவர்கள் மிகவும் ஆர்வம் மிக்கவர்கள் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவது மிகவும் வரப்பிரசாதமாகவே கருதுகிறேன். அதே போல் அருமையான பாடசாலை அங்கே ஆசிரியர்கள் விடுதிக்காக பாடுபடுவதையும் அதே போல் அதிபர் கடவுள் கொடுத்த கொடை என்றுதான் கூறத்தக்க வகையில் செயற்படுவதையும், அவர்களோடு பணி செய்ய எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டும் மகிழ்வடைவதுடன் அதற்கு அருள் கொடுத்த இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

**திரு.ம.விக்னேஸ்வரன்**
விடுதிக் காப்பாளர்
ஆண் மாணவர் விடுதி,
மு/மல்லாவி மத்திய கல்லூரி.
(தேசிய பாடசாலை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களமாடு கல்விக்காய்

கவலைகள் தனை மறந்து
காலமதை வென்றிட நீ
கல்லூரித் தாயின்
காலடிக்கு வந்திடு நீ

கடினமான பாதைதனைக்
கடந்து நீ செல்ல வேண்டும்
கலங்காது எதையும் நீ
கவனத்திற் கொள்ள வேண்டும்

கடமைதனை மனதினிலே
கண்ணியமாய் எண்ண வேண்டும்
கட்டுக் கோப்புடனே எதையும்
கச்சிதமாய் முடிக்க வேண்டும்

கனத்த மனதிருந்தால் அதை
கலைந்துச் சென்றிடு நீ
கதைக்கும் எதனையும் நீ
கவனத்திற் கொண்டிடு நீ

கள்ள மனமிருந்தால் அதை நீ
கண்ணிமைக்கும் நொடியினிலே
கல்லை எறிவது போல்
கனதூரம் எறிய வேண்டும்

கள்ளம் கபடமில்லா
கண்ணிய புருடனென
கல்லூரியில் அனைவரும்
கதைக்கும் வண்ணம் நடக்கவேண்டும்

கற்ற கல்வி ஒருபோதும்
காணாமல் போகாது
காலமெல்லாம் நீயதனைக்
கருவினிலே கொண்டிடடா

கல்லூரிக் காலத்தில்
களிப்புடனே நீ பயின்று
கனவுகள் அனைத்தையுமே
களமாடி வென்றிடடா

**திரு.ஆ.இளமாறன்.**
உயிரியல் ஆசான்.
மு/மல்லாவி மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதி சார் நற்பெறுபேறுகள் வரிசையில்.......

## G.C.E (O/L) – சித்தி பெற்று உயர்தரப்பிரிவிற்கு தகைமை பெற்றோர்

### 2016ஆம் ஆண்டு

செல்வி.த.சத்தியா (மூன்று முறிப்பு நட்டாங்கண்டல்)
செல்வி.ஸ்ரீ.சிந்துஜா (மல்லாவி வடக்கு, மல்லாவி)
செல்வி.பே.தமிழ்விழி (ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான்)
செல்வி. மிதுஷாளினி (விநாயகபுரம், துணுக்காய்)

### 2017ஆம் ஆண்டு

செல்வி.ஆ.கிருஷா (மூன்று முறிப்பு நட்டாங்கண்டல்)
செல்வி.கு.வினுஷா (மூன்று முறிப்பு நட்டாங்கண்டல)
செல்வி.கி.வேணுஜா (அனிச்சியங்குளம், மல்லாவி)
செல்வி.ச.கோபிகா (மல்லாவி வடக்கு, மல்லாவி)
செல்வி.வ.ருபின்சா (ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான்)
செல்வி.இ.றாஜினி (மல்லாவி வடக்கு, மல்லாவி)
செல்வி.பூ.போயச்சிற்றி (ஆலங்குளம், துணுக்காய்)
செல்வி.ம.ஜீவிகா (தம்பன்னை)
செல்வி.ச.குபேந்தினி (வளநகர், யோகபுரம்)

### 2018ஆம் ஆண்டு

செல்வி.செ.கபின்ஷா (கல்விளான் துணுக்காய்)
செல்வி.க.சங்கீர்த்தனா (கோவில் குஞ்சுக்குளம்)
செல்வி.ஜெ.டினோஜா (மூன்று முறிப்பு, நட்டாங்கண்டல்)
செல்வி.ச.பாணுஜா (ஆலங்குளம், துணுக்காய்)
செல்வி.ந.தயாளினி (ஆலங்குளம், துணுக்காய்)
செல்வி.கு.பிருந்தா (பூவரசங்குளம், நட்டாங்கண்டல்)
செல்வி.பி.கம்சிகா (ஊரெழு வடக்கு, சுன்னாகம்)
செல்வி.நே.காணுஷா (மல்லாவி வடக்கு, மல்லாவி)
செல்வி.இ.சதுஜா (மூன்று முறிப்பு, நட்டாங்கண்டல்)
செல்வி.யோ.லோகசர்வி (மூன்று முறிப்பு, நட்டாங்கண்டல்)
செல்வி.வி.கிசோபா (மூன்று முறிப்பு, நட்டாங்கண்டல்)
செல்வி.ம.பூலோகநாயகி (பாலமோட்டை, வவுனியா)
செல்வி.ச.பிரியங்கா (கிளவிகுளம், பாலமோட்டை)
செல்வி.ஜெ.சுமித்திரா (யோகபுரம் மத்தி, மல்லாவி)
செல்வி.ஜெ.லோஜிகா (வளநகர், யோகபுரம்)

## பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

### 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019 வரை

செல்வி.S.பிருந்தா (சின்னத் தம்பனை)
செல்வி.P.விதுஷா (ஐயன்கன்குளம்)
செல்வி.K.ஜான்சிகா (நட்டாங்கண்டல்)
செல்வி.S.ஜசிதா (சின்ன வலயன்கட்டு)
செல்வி.S.தனுஷா (கல்விளான்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

### ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



### உயர்திரு.இ.இளங்கோவன்

செயலாளர்,
கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம், யாழ்ப்பாணம்.

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிக்கொடையில் அமைக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதி திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தமைக்கு மதிப்பளித்து இந்நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுகினறது.

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**
**11-03-2020.**

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

## மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

### ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



### Dr.விமல் ஜெயரட்ணம் (லண்டன்)

விடுதிகளுக்கான கொடை வள்ளல்

மு/மல்லாவி மத்திய கல்லூரியின் ஆண் மாணவர் விடுதியை நிதிக்கொடுப்பனவு மூலம் அனைத்து வசதிகளுடனும், சிறப்பாக அமைத்து வழங்கியதுடன் தொடர்ச்சியாக நடாத்துவதற்குரிய அனுசரணைகளை வழங்கி வருகின்றமைக்கு மதிப்பளித்து ஆண் மாணவர் விடுதி திறப்பு விழா வைபவத்தில் **"அறிவுச்செம்பரிதி"** எனும் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

**கல்லூரிச்சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**
**11-03-2020.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

### ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



பொறியியலாளர்
**திரு.ந.சிறீஸ்கந்தராஜா**
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
நீப்பாசனத் திணைக்களம்,
வவுனியா.

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிக்கொடையில் அமைக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதிக்குரிய திட்டமிடல் கட்டடவடிவமைப்பு மற்றும் கண்காணிப்பு ஒழுங்கமைப்பு ஆலோசனை வழிகாட்டல் என்பவற்றை தொடர்ச்சியாக வழங்கிவருகின்றமைக்கு மதிப்பளித்து ஆண் மாணவர் விடுதி திறப்புவிழா வைபவத்தில் **"நிர்மாண ஆல்தரு"** எனும் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**
**11-03-2020.**

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

## மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

### ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



**U.N.D.நவரட்ண**
(கட்டட ஒப்பந்ததாரர்)

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிக்கொடையில் அமைக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதி திறப்பு விழா வைபவத்தில் கட்டடத்தொகுதியை சிறப்பான முறையில் நிர்மாணித்து உரிய காலத்தில் விரைவாக நிறைவேற்றித் தந்துதவியமைக்கு மதிப்பளித்து **"நுட்ப நிர்மாணர்"** எனும் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**
**11-03-2020.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

### ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



**திருமதி மாலதி முகுந்தன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
துணுக்காய்.

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிக்கொடையில் அமையப்பெற்ற ஆண் மாணவர் விடுதி வளர்ச்சி பெறுவதற்குரிய அனுமதிகள் ஆலோசனைகள் யாவற்றையும் வழங்கி இன்றைய நாளில் கலந்து சிறப்பித்தமைக்கு மதிப்பளித்து இந்நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**
**11-03-2020.**

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

## மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

### ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



**திருமதி சசீஸ்குமார் லதுமீரா**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
துணுக்காய்.

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிக்கொடையில் அமைக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதியின் திறப்பு விழாவில் கலந்து சிறப்பித்தமைக்கு மதிப்பளித்து இவ் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**
**11-03-2020.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

## ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



ஸ்கந்த பூஜா
**சிவஸ்ரீ.இ.திருமுருகானந்தக்குருக்கள்**
பிரதமகுரு, பாலசுப்பிரமணியர் தேவஸ்தானம்,
மல்லாவி.

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிக்கொடையில் அமைக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதித் திறப்பு விழா வைபவத்தில் கலந்து ஆசிவழங்கியமைக்கு இவ் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

# மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

## ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



**அருட்தந்தை நேசன் குலாஸ் அடிகளார், C.M.F**
பங்குத் தந்தை,
மல்லாவி.

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிக்கொடையில் அமைக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதித் திறப்பு விழா வைபவத்தில் கலந்து ஆசிவழங்கியமைக்கு மதிப்பளித்து இவ் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**
**11-03-2020.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

## ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



**திரு.செ.உதயகுமார்**

மாகாணக்கல்விப் பணிப்பாளர்,

வடக்கு மாகாணம்,

யாழ்ப்பாணம்.

மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிக்கொடையில் அமைக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதி திறப்பு விழா நினைவாக இச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

# மு/மல்லாவி மத்திய கல்லூரி (தேசியபாடசாலை)

## ஆண் மாணவர் விடுதித்திறப்பு விழா நினைவு விருது



மு/மல்லாவி மத்திய கல்லூரியில் வைத்திய கலாநிதி விமல் ஜெயரட்ணம் அவர்களின் நிதிக்கொடையில் அமைக்கப்பட்ட ஆண் மாணவர் விடுதி திறப்பு விழா நினைவாக இச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

**கல்லூரிச் சமூகம்,**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி,**
**தேசிய பாடசாலை.**
**11-03-2020.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயத்தின் இனிமையான நன்றியுடன்

இதழ் சிறக்க எமக்கு
இதமுடன் வாழ்த்துரைத்த
இனிமையான இதயங்களே
இவ்வுலகம் உள்ளவரை
இரங்குகின்ற சிறப்புடைய
இணையேதும் ஒருபோதும்
இகத்தினிலே இல்லாத
இன்னோரென்ன கொடைவள்ளல்
இறையையொத்த விமல் ஐயாவே
இடரேதும் சூழாது
இடமறிந்து உதவிய
இவ்வுலகின் உத்தமரே
இயன்றவரை சுறுசுறுப்பாய்
இளமையுடன் உழைக்கின்ற
இனியவெம் கல்லூரி முதல்வரே
இடமறிந்து பொருளறிந்து
இல்லத்தை வடிவமைத்த எந்திரனே
இம்மலரின் பக்கமெல்லாம்
இனிய நல் ஆக்கங்களை
இனிமையாகப் பதிவிலிட்ட
இக்கல்லூரி மாணவ மணிகளே
இன்னோரன்ன கல்லூரி வரலாற்றை
இயன்றளவும் பதிவு செய்த ஆசானே
இடையிடையே ஆக்கங்கள்
இதழிற்கு நல்கிநின்ற
இம்மண்ணின் பெற்றோரே
இணையிலா ஆசான்களே
இதழிற்கு நிதியூட்டம்
இட்ட வர்த்தகர்களே
இம்மலரின் அட்டைப்படம்
இவை தவிர இதழிருக்கும்
இத்தனை விடயங்களும்
இம்மலரில் பதிவிலிட
இங்கு பேருதவி செய்த
இனிய "தணூஸ் டிஜிற்றல்" நிறுவனமே
இத்தனை பேர் தவிர
இங்கு நாம் யாரையேனும்
இம்மியேனும் மறந்திருந்தால்
இயன்றவரை மன்னிப்பீர்
இதயத்து நன்றிகள்
இனிமையுடன் அனைவருக்கும்

**இதழ் ஆக்கக்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org